விலை: 50.00
பக்கங்கள் : 16

website : www.valampurii.lk
viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24

ஒலி 031 வள்ளுவர் ஆண்டு 2054 தை 05 வியாழக்கிழமை (19.01.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829



கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=


யாழ்.மாநகர சபையின்

## முதல்வர் வேட்பாளராக மீண்டும் ஆனல்ட்



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையில் இன்று நடைபெறவுள்ள முதல்வர் தெரிவில் இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பாக இம்மானுவேல் ஆனல்டை நியமிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மார்ட்டின் 15

## வேலன் சுவாமிகள் கைதாகி பிணையில் விடுதலை

(யாழ்ப்பாணம்)

பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் தவத்திரு. வேலன் சுவாமிகள்யாழ்ப்பாணப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தேசிய பொங்கல் விழாவில் ஜனாதிபதி கலந்து கொண்ட போது யாழ்.பல்கலைக்கழக மாண 15



# உள்ளூராட்சி தேர்தல் நிச்சயம் நடத்தப்படும்

## தேர்தல்கள் ஆணைக்குழு உயர்நீதிமன்றில் உறுதி



(கொழும்பு)

தேர்தலுக்கான வேட்புமனு கோரல் நிறைவடைந்த பின்னர் உள்ளூராட்சி சபைத் தேர்தல் நிச்சயம் நடத்தப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு உயர்நீதிமன்றில் உறுதியளித்துள்ளது.

உள்ளூராட்சி மன்ற தேர்தலை நடத்த நடவடிக்கை எடுக்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு உத்தரவிடக்கோரி பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் தாக்கல் செய்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

இதன்போது, தேர்தல் 15

## 12 அத்தியாவசிய பொருட்களின் விலை குறைப்பு

(கொழும்பு)

12 அத்தியாவசிய பொருட்களுக்கான விலைகளை நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் லங்கா சதொச நிறுவனம் குறைத்துள்ளது.

இதற்கமைய, பெரிய வெங்காயம் 1 கிலோ 05 ரூபாயால் குறைக்கப்பட்டு புதிய விலை 15

## தேங்காய் விழுந்ததில் ஒருவர் உயிரிழப்பு

அராலியில் சம்பவம்



(யாழ்ப்பாணம்)

தென்னை மரத்தின் கீழ் படுத்திருந்தவர் மீது தேங்காய் விழுந்ததில் குறித்த நபர் உயிரிழந்துள்ளார். 15

## ஜெய்சங்கர் இன்று இலங்கை விஜயம்

பல்வேறு தரப்புகளுடன் சந்திப்பு



(கொழும்பு)

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் இன்று இலங்கை விஜயம் மேற்கொள்ளவுள்ளார். 15

## தேர்தல் செலவின ஒழுங்குபடுத்தல் சட்டமூலம் இன்று விவாதம்

(கொழும்பு)

தேர்தல் செலவின ஒழுங்குபடுத்தல் சட்டமூலத்தை இன்று விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள பாராளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பிலான தெரிவுக்குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சியினரின் எதிர்ப்பிற்கு மத்தியில், தேர்தல் செலவின ஒழுங்குபடுத்தல் சட்டமூலத்தை இன்று விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பிலான தெரிவுக்குழு கூட்டத்திற்கு முன்னதாக இந்த சட்டமூலம் தொடர்பில் சபாநாயகர் தலைமையில் விசேட கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெற்றது.

இதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் கலந்து கொண்டிருந்தார். (ம-7)

## அதிகாரத்தை பரவலாக்கினால் பயங்கரவாதம் தலைதூக்கும்

பாராளுமன்றில் சரத் பொன்சேகா



(கொழும்பு)

13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி, நாட்டில் அதிகாரப் பரவலாக்கலை மேற்கொண்டால், மீண்டும் நாட்டில் பயங்கரவாதம் தலைதூக்கும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற சபை ஒத்தி 15

## பேராதனை பல்கலை மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

பொலிஸார் கண்ணீர்ப்புகைத் தாக்குதல்

(கொழும்பு)

பேராதனை பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தினரால் நேற்று முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் அமைதியின்மை நிலவியது.

இதன்போது போராட்டக்காரர்களை கலைக்க பொலிஸார் கண்ணீர்ப் புகை மற்றும் நீர்த்தாரை தாக்குதலை மேற்கொண்டனர்.

பேராதனை பல்கலைக் கழக மாணவர் ஒன்றிய தலைவர் உள்ளிட்ட பல்கலைக் கழக மாணவர்களை விடுதலை செய்ய 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதித்திட்டங்களால் தேர்தலை ஒத்திவைக்க அரசு சதி

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



(கொழும்பு)

சதித்திட்டங்கள் மூலம் தேர்தலை ஒத்திவைக்க அரசாங்கம் சதி செய்வதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்தியுள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தேர்தல் செலவுகளை கட்டுப்படுத்துவதற்கான சட்டமூலத்தில் சிறு சிறு குறைபாடுகள் இருந்த போதிலும், பரந்த அர்த்தத்தில் ஒரு நல்ல சட்டம் எனவும், முறைமை மாற்றத்திற்கு இது முக்கிய மானது எனவும், சில திருத்தங்கள் இருந்தாலும் பேச்சுவார்த்தை மூலம் அதனை மேற்கொள்ள முடியும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இந்நாட்களில் உள்ளூராட்சி மன்றங்களுக்கான கட்டுப்பணம் செலுத்தும் செயன்முறை இடம்பெற்று வருவதனால் இந்த சட்டம் மிகவும் முக்கியமானதாக இருந்தாலும், இதை செயல்படுத்தும் நேரத்தில் சில சிக்கல் உள்ளதாகவும் இதன் மூலம் குழப்ப நிலை நிலவுவதாகவும், இதனை நிறைவேற்றினால் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு இடையூறாக அமையும் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த வரைவின்படி, வேட்பாளர்கள் தங்கள் செலவுகள் குறித்த முறையான அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும் எனவும், அவ்வாறு சமர்ப்பிக்காவிடின் அது குற்றமாகும் எனவும்,சமர்ப்பிக்காவிட்டால் மனுவைக் கூட சமர்ப்பிக்க முடியாது.

இது மிகவும் நல்ல சரத்து என்றாலும் 2023 மார்ச் தேர்தலில் இது சிக்கலை ஏற்படுத்தும் எனவும் எதிர்க் கட்சித் தலைவர் தெரிவித்தார். (ம-7)

# வட மாகாணப் பாடசாலைகளில் மாணவர் பரம்பல் சீராக்கப்படும்

## அதிபர் சங்கத்திடம் மாகாணக் கல்விப்பணிப்பாளர் உறுதி



(யாழ்ப்பாணம்)

வடமாகாணப் பாடசாலைகளில் மாணவர் பரம்பலைச் சீர்படுத்தி எதிர்காலத்தில் கிராமியப் பாடசாலைகளின் வளர்ச்சியில் கூடிய கவனம் செலுத்தவுள்ளதாக வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் யோன் குயின்ரஸ் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் வடமாகாணக்கல்வித்திணைக்களத்தில் இடம்பெற்ற வட மாகாண அதிபர்கள் சங்கப் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வட மாகாணத்தில் மாணவர் பரம்பல் சில பாடசாலைகளில் குவிந்தும் பல பாடசாலைகளில் நலிந்தும் இருப்பது ஆரோக்கியமற்ற நிலைமையாகும்.

சில பாடசாலைகள் கல்விச் சுற்றறிக்கைகளைப் புறக்கணித்து - உளவியலாளர்களின் ஆலோசனைகளுக்கு மாறாக, வகுப்பறையில் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கைக்கு அதிகமாக மாணவர்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

இந்நிலைமைகள் மாணவர்களின் ஆளுமை விருத்தி மற்றும் கற்றல் அடைவில் பாதிப்பை ஏற்படுத்துவதுடன் நீண்ட பாரம்பரியமிக்க பாடசாலைகள் மூடப்படும் அபாய நிலையையும் தோற்றுவித்துள்ளதென, வடமாகாண அதிபர்கள் சங்கம் மாகாணக் கல்விப் பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டு வந்தது.

மேலும், வடமாகாணப் பாடசாலைகளின் அதிபர்கள் எதிர்நோக்கும் பொதுவான பிரச்சினைகள் மற்றும் வடமாகாண கல்வி அபிவிருத்தி என்பன தொடர்பாகவும் இதன் போது கலந்துரையாடப்பட்டது.

இக்கலந்துரையாடலில் வடமாகாண அதிபர்கள் சங்கத்தின் தலைவர் வி.ரி.ஜெயந்தன், செயலாளர் கு.திலீபன், பொருளாளர் தி.வரதன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம)

## வல்லைப் பகுதியில்

# வடி ரக வாகனம் தீப்பற்றி எரிந்தது



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இருந்து மரக்கறி வகைகளை ஏற்றிக் கொண்டு வடமராட்சி நோக்கி சென்று கொண்டிருந்த வடி ரக வாகனம் ஒன்று, திடீரென தீப்பற்றி எரிந்து நசமாகியுள்ளது.

நேற்றுக் காலை 8 மணியளவில் வல்லைப் பகுதியில் குறித்த சம்பவம் இடம்பெற்றது.

தீ விபத்து தொடர்பில் நெல்லியடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,33,104)

# போதைக்கு அடிமையானவர்களை சிறையில் அடைத்து பயனில்லை

## அமைச்சர் அலி சப்ரி



(கொழும்பு)

போதைப் பொருளுக்கு அடிமையானவர்களை சிறையில் அடைத்து பயனில்லை எனவும், அவர்களுக்கு புனர்வாழ்வு பயிற்சிகளும் சிகிச்சைகளும் வழங்கப்பட வேண்டும் எனவும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், 'ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப் பொருட்கள் தொடர்பில் எமக்கு பாரிய பிரச்சினை இருக்கின்றது.

இளைஞர்களுக்கு குற்றங்களுடன் தொடர்பு இருந்தால், சாட்சியங்கள் இருக்குமாயின் அவர்களுக்கு எதிராக வழக்கு தொடர வேண்டும்.

ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப் பொருட்களுக்கு அடிமையான அதிகளவானோர் இருக்கின்றனர்.

அவர்களை பிரித்து அடையாளம்காண வேண்டும். இவர்களுக்கு மேலே சர்வதேச ரீதியில் தொடர்புகள் இருக்கும் போதைப் பொருள் கடத்தல்காரர்கள் இருக்கின்றனர்.

அவர்களுக்கு கீழே நாடு முழுவதும் விநியோகிக்கும் வலையமைப்பை சேர்ந்த சுமார் 500 பேர் இருக்கின்றனர். போதைப் பொருளுக்கு அடிமையான சுமார் ஒரு லட்சம் பேர் இருக்கின்றனர். போதைப் பொருளுக்கு அடிமையானவர்களை விரட்டி செல்வதில் பயனில்லை.

அவர்களை சிறையில் அடைத்தும் பயனில்லை. அவர்களுக்கு புனர்வாழ்வு பயிற்சிகளும் சிகிச்சைகளும் வழங்கப்பட வேண்டும்.

நெத்தி மீன்களை துரத்தி சென்று பிடித்து சிறையில் அடைத்து சிறைச்சாலைகளை நாம் நிரப்பி வருகின்றோம். இவர்களுக்கு எதிரான வழக்குகள் தினமும் விசாரிக்கப்படுகின்றன.

சுறா மீன்களாக போதைப்பொருட்கள் கடத்தல்காரர்களில் வழக்குகளை விசாரிக்க நேரமில்லை. அவர்கள் தப்பிச் சென்று விடுகின்றனர் எனத் தெரிவித்துள்ளார். (ம-7)


# 1 ஆம் ஆண்டு நினைவலைகள்

## சண்முகம் பஞ்சாட்சரம்

(கலாபூஷணம்)

(விஷக்கடி வைத்தியர்-ஓய்வு நிலை விற்பனைத் திணைக்கள ஊழியர்)

திதி - அபரபக்க திரயோதசி



பார்புகழ் கலைஞர் பஞ்சாட்சரம் சோதியில் கலந்து
ஓராண்டு நிறைவு
சகல துறைகளிலும் சாதனை படைத்து
வேதனை போக்கியே விஷத்தை நீக்கியவர்
விஷக்கடி வைத்தியத்தில் விருது பெற்றவர்.
கலை உயர் தரத்தில் கலாபூஷணம் பெற்றவர்
பரமன் அருளால் பல நலனும் பெற்று
அண்ணமாரின் அடியவர் ஆனவர்
ஊரவர் உறவுகள் என்றும் உவந்து போற்றிடும்
மாமனிதர் சண்முகம் பஞ்சாட்சரம் - குடும்பத்தினர்.

இல.39, வேலப்பர் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

(14318)


# லக்ஷ்மன் கிரியெல்ல தனது தொலைபேசியை ஒட்டுக்கேட்கிறார்

## நீதியமைச்சர் விஜயதாச

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தனது தொலைபேசியை ஒட்டுக்கேட்டதாக நீதியமைச்சர் அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஸ நேற்று குற்றம் சுமத்தியுள்ளார்.

ஜனாதிபதியும் பிரதமரும் தம்முடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு, தம்மை விமர்சித்ததாக கிரியெல்ல தெரிவித்த கருத்து தொடர்பிலேயே விஜயதாச ராஜபக்ஸ இந்த குற்றச்சாட்டை சுமத்தினார்.

இது ஒரு தீவிரமான பிரச்சினை என்று குறிப்பிட்ட அவர், தமது தொலைபேசி உரையாடல்களை அவர் ஒட்டுக்கேட்டு கொண்டிருக்கிறார் என்றும் குற்றம் சுமத்தினார்.

தனக்கு எதிராக சேறு பூசும் பிரசாரத்தில் லக்ஸ்மன் கிரியெல்ல ஈடுபட்டுள்ளதாக அமைச்சர் குறை கூறினார்.

இந்தநிலையில், ஜனாதிபதியும் பிரதமரும் அமைச்சருடன் தொடர் கொண்டமை எப்படி தெரிய வந்தது என்று, சபாநாயகர், லக்ஸ்மன் கிரியெல்ல விடம் கேட்டபோது, லக்ஸ்மன் கிரியெல்ல அதற்கு பதிலளிக்கவில்லை. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலை ஒத்தி வைத்தால் வீதியில் இறங்கிப் போராடுவோம்

## எதிர்க்கட்சிகள் கூட்டாக எச்சரிக்கை

(கொழும்பு)

**உள்ளூராட்சி சபைத் தேர்தலை அரசாங்கம் ஒத்திப்போட்டால் அதற்கு எதிராக பெருமளவு மக்களை வீதியில் இறக்கிப் போராடுவோம் என்று எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் கூட்டாக எச்சரிக்கை விடுத்துள்ளனர்.**

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ, மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோர் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர்கள், "நாட்டை மேலும் வங்குரோத்து நிலைக்குத் தள்ளுவதற்கே அரசாங்கம் முயக்கின்றது. மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண இந்த அரசாங்கம் எந்த் நடவடிக்கையையும் இதுவரை எடுக்கவில்லை.

மின் கட்டணத்தை மேலும் அதிகரிப்பதில் அரசாங்கம் உறுதியாக இருக்கின்றது. இதனால் பல தொழிற்சாலைகள் மூடப்படும். பொருளாதாரம் மேலும் பின்னடைவைச் சந்திக்கும்.

இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அரசாங்கம் நிச்சயம் படுதோல்வியைச் சந்திக்கும். நிலையான அரசாங்கம் இருந்தால் மாத்திரமே இந்தப் பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்று சர்வதேச நாடுகள் கூறுகின்றன.

ஆனால் தாம் தோற்றுவிடுவோம் எனப் பயந்து அரசாங்கம் தேர்தலை ஒத்திப்போட்டால் இலட்சக்கணக்கில் மக்களை வீதிக்கு இறக்கிப் போராடுவோம்" எனவும் அவர்கள் கடுமையான எச்சரிக்கை விடுத்துள்ளனர். (நி)

# தேசிய அடையாள அட்டைகள் வழங்கும் பணி இடைநிறுத்தம்

## ஆட்பதிவு திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

தேசிய அடையாள அட்டைகளை அச்சிடுவதற்கு பயன்படுத்தப்படும் அட்டைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனால் 2005 ஆம் ஆண்டுக்கு பின்னர் பிறந்தவர்களுக்கான தேசிய அடையாள அட்டை வழங்கும் நடவடிக்கை எதிர்வரும் ஓக்ஸ்ட் மாதம் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு தேசிய அடையாள அட்டைக்குப் பதிலாக திணைக்களத்தினால் சான்றளிக்கப்பட்ட ஆவணத்தை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் பிரதீப் சபுதந்திரி தெரிவித்துள்ளார்.

இவ்வாறு வழங்கப்படும் ஆவணம் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் வரை செல்லுபடியாகும் வகையில் தயாரிக்கப்படும்.

அதற்கமைய, தேசிய அடையாள அட்டைகளை அச்சிடுவதற்கு பயன்படுத்தப்படும் அட்டைகளின் தற்போதைய தட்டுப்பாடு நீங்கும் வரை தேசிய அடையாள அட்டைகளை வழங்குவதை கட்டுப்படுத்த வேண்டியுள்ளதாக அவர் தெரிவித்தார். (நி)

# சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிப்பு

(கொழும்பு)


இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 47 ஆயிரத்து 353 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

இலங்கை சுற்றுலா அதிகார சபையின் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ இந்த விடயத்தினைத் தெரிவித்துள்ளார். கடந்த 1 ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரையான காலப்பகுதியில் குறித்த சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இம்மாதம் ஒரு இலட்சத்து ஐந்தாயிரம் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு அழைத்து வரப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

# சுதந்திர தின செலவுகள் எதிர்காலத்திற்கான முதலீடு

## ஜனாதிபதி



(கொழும்பு)

சுதந்திர தினக் கொண்டாட்டச் செலவுகள் எதிர்காலத்திற்கான முதலீடாகும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

சுதந்திர தினக் கொண்டாட்டங்களுக்காக அரசாங்கம் அதிகளவு செலவு செய்வதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இன்று சுதந்திரத்திற்குப் பின்னர் எமக்கு 75 ஆண்டுகள் பூர்த்தியாகியுள்ளன. சுதந்திரம் அடைந்து 100 வருடங்கள் பூர்த்தியாகும் சந்தர்ப்பத்தில் நாட்டின் மறுசீரமைப்புக்கு அவசியமான பல நிறுவனங்களை உருவாக்க நடவடிக்கை எடுப்போம்.

அதற்கமைய வரலாற்று தொடர்பிலான நிறுவனமொன்றை ஸ்தாபிப்பதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

வரலாற்றை மறந்து விட்டோம் என்பதே தங்கள் மீது இப்போதுள்ள பாரிய குற்றச்சாட்டு என தெரிவித்துள்ள ஜனாதிபதி, அப்படியானால் அவ்வாறானதொரு நிறுவனத்தை ஆரம்பித்தே ஆக வேண்டும்.

அத்துடன், பொருளியல் மற்றும் வர்த்தக நிறுவனமொன்றை நிறுவவுள்ளதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (நி)

# 25 ட்ரில்லியனை எட்டியுள்ள இலங்கையின் மொத்தக்கடன்

(கொழும்பு)

அரசாங்கத்தின் மொத்தக் கடன் தொகை 25 ட்ரில்லியன் ரூபாவை கடந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 2022 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் கடன் தொகை 25000 பில்லியன் ரூபா அல்லது 25 ட்ரில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது. இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட புதிய அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக அரசாங்கத்தின் மொத்த கடன் தொகை 25 ட்ரில்லியன் ரூபாவை கடந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உள்நாட்டு கடன் தொகை அதிகரிப்பு காரணமாக இவ்வாறு அரசாங்கத்தின் மொத்த கடன் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக
யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.
ITMUT சர்வதேச பல்கலைக்கழகம் (பிரேசில்)
ஊடாக மதிப்புறு முனைவர் (கலாநிதி) பட்டமளிப்பு விழா



- உலக சாதனை படைத்தோர்
- சமூகநலச் சேவையாளர்கள்
- கலைத்துறைகளைச் சார்ந்த சேவையாளர்கள் மற்றும் சாதனையாளர்கள்
- பல்துறை ஆராய்ச்சியாளர்கள்
- இன மத நல்லிணக்கத்திற்காக அர்ப்பணிப்போடு பணியாற்றுவோர்
- லயன்ஸ் மற்றும் ரோட்டரி போன்ற பன்னாட்டு தொண்டு அமைப்பின் உறுப்பினர்கள்

போன்றோர் விண்ணப்பிக்கலாம்.



முதன்மை விருந்தினர்
மாண்புமிகு பேராசிரியர்.
சு.மோகனதாஸ்
வேந்தர், வவுனியாப் பல்கலைக்கழகம்

நாள் : 28.01.2023
இடம் : யாழ்ப்பாணம்

ITMUT
CNPJ-26.113.456/0001-51
The Universal ITMUT University
theological institute mission the last trumpet
1° CARTORIO DE REGISTROS E NOTAS BARBACENA-MG, NO 1854-CNPJ-26.113.456/0001-51
http://itmut.comunidades.net
ADDRESS: 39, Macedonia Garden City, Sao Paulo, Brazil, Cep - 05984-400
(14307)

பதிவு செய்ய விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய எண்
LION.AMB.DR.J.JUDE NIMALAN J.P(W.I) : 0777204554

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாவட்ட துடுப்பாட்ட சங்கத்தின் T-20 வெற்றிக்கிண்ணம் T.C.C வசமானது







யாழ்.மாவட்ட துடுப்பாட்ட சங்கம் 2ஆவது தடவையாக நடத்தி வந்த T-20 வெற்றிக்கிண்ணம் T.C.C யின் வசமானது. கடந்த முறையும் மகாலிங்கம் T-20 வெற்றிக்கிண்ணமும் T.C.C யின் வசமானது. பதிவு செய்யப்பட்ட கழகங்கள் யாவும் பங்கு பற்றியமை குறிப்பிடத்தக்கது.

இறுதிப் போட்டிக்கு T.C.C , விக்டோறியன்ஸ் அணிகள் தெரிவு செய்யப்பட்டன.

இறுதிப் போட்டி கடந்த 15 ஆம் திகதி யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போது முதலில் துடுப்பெடுத்தாடிய T.C.C அணி 19.5 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 122 ஓட்டங்களை பெற்றது.

சுஜன்-28, அனுரதன்-17, சுரேந்திரன்-12, றெகான் -20, அன்ஜனன்-12, றஜின்தன்-11 ஓட்டங்களை பெற்றனர்.பந்து வீச்சில் விக்ரோறியன்ஸ் அணியை சார்ந்த விஜியகுமார் 04 ஓவர்களில் 19 ஓட்டங்களை கொடுத்து 01 இலக்கினையும் பிரியங்கன் 04 ஓவர்களில் 22 ஓட்டங்களை கொடுத்து 02 இலக்கினையும் பிரதீஸ் 3.5 ஓவர்களில் 10 ஓட்டங்களை கொடுத்து 04 இலக்குகளையும், குகசாந்தன் 2 ஓவர்களில் 18 ஓட்டங்களை கொடுத்து 02 இலக்கினையும் கைப்பற்றினர்.

123 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு களமிறங்கிய விக்ரோறியன்ஸ் அணியினர் 19.2 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 108 ஓட்டங்களை பெற்றனர்.

பிரியங்கன்-16, கிருஷாந்-20, பிரதீஸ்-33, விஜியகுமார்-17 · ஓட்டங்களை பெற்றனர்.

பந்து வீச்சில் T.C.C அணி சார்பாக சுரேந்திரன் 4 ஓவர்களில் 34 ஓட்டங்களை கொடுத்து 02 இலக்குகளையும் கிருஷாந் 3.2 ஓவர்களில் 18 ஓட்டங்களைக் கொடுத்து 02 இலக்குகளையும் சுஜன் 04 ஓவர்களில் 13 ஓட்டங்களை கொடுத்து 02 இலக்குகளையும் கைப்பற்றினர்.

T.C.C அணி, விக்ரோறியன்ஸ் அணியை 14 ஓட்டங்களால் வெற்றி பெற்று J.D.C.A T-20 வெற்றிக்கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டனர்.

முதலாம் இடத்தை பெற்ற T.C.C அணியினருக்கு வெற்றிக்கிண்ணமும் பணப் பரிசிலும் வழங்கப்பட்டது.

இவ் இறுதிப் போட்டியின் சிறந்த வீரராக T.C.C அணியை சேர்ந்த சுஜன் என்பவருக்கு வெற்றிக் கிண்ணமும் பணப் பரிசிலும் வழங்கப்பட்டது.

2 ஆம் இடத்தை (Runner-up) பெற்ற விக்ரோறியன்ஸ் அணியினருக்கு வெற்றிக் கிண்ணமும் பணப் பரிசிலும் வழங்கப்பட்டது. (4)

# நடப்புச் சம்பியன் நடால் முதல் சுற்றுடன் வெளியேற்றம்



அவுஸ்திரேலிய பகிரங்க டென்னிஸ் தொடரில், நடப்புச் சம்பியனான ஸ்பானிய வீரர் ரபாயெல் நடால், முதல் சுற்றுடன் வெளியே றினார்.

36 வயதான ரபாயெல் நடால், ஒற்றையர் போட்டிகளில் கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்று சாதனை படைத்தவர். உலகில் அதிக எண்ணிக்கையான ஒற்றையர் கிராண்ட் ஸ்லாம் சம்பியன் பட்டங்களை வென்ற ஆண் அவர்.

14 விம்பிள்டன் சம்பியன் பட்டங்கள், 4 அமெரிக்க பகிரங்கப் பட்டங்களை வென்றதுடன் விம்பிள்டன், பிரெஞ்சு பகிரங்க டென்னிஸ் போட்டிகளில் தலா 2 தட வைகள் சம்பியனாகியவர் நடால். அவுஸ்திரேலிய பகிரங்க டென்னிஸ் போட்டி களில 2019, 2022 ஆம் ஆண்டுகளில் சம்பியனா கியிருந்தார்.

தரப்படுத்தலில் உலகின் 2 ஆம் நிலை வீரராக அவர் உள்ளார். இந் நிலையில் நேற்று நடை பெற்ற ஆண்கள் ஒற்றையர் முதல் சுற்றுப்போட்டியொன்றில் நடப்புச் சம்பியன் ரபாயெல் நடாலை அமெரிக்காவின் மெக்கன்ஸி மெக்டொனால்ட் 6-4, 6-4, 7-5 விகித்தில் தோற் கடித்தார்.(4)

## ஆஸி.ஓபன்

# இரண்டாவது சுற்றுக்குள் ஜோகோவிச் , ஆண்டி முர்ரே



நடப்பு ஆண்டின் முதல் கிராண்ட்ஸ்லாம் போட்டியான 111 ஆவது அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடர் மெல்போர்னில் நடைபெற்று வருகிறது.

இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் செர்பியாவின் நோவக் ஜோகோவிச், ஸ்பெயினின் கார்பெலசுடன் மோதினார்.

இதில் ஜோகோவிச் 6-3, 6-4, 6-0 என எளிதில் வென்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார். இதேபோல், இங்கிலாந்தின் முன்னணி டென்னிஸ் வீரரான ஆண்டி முர்ரே, இத்தாலி வீரர் மேட்டியோ பெரெட்னியுடன் மோதினார். பரபரப்பாக நடைபெற்ற இந்தப் போட்டியில் சிறப்பாக விளையாடிய ஆண்டி முர்ரே 6-3, 6-3, 4-6, 6-7 , 7-6 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறினார். (4)

# இலங்கை அணியுடன் இணைகிறார் குசல் ஜனித்



இலங்கை அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் குசல் ஜனித் பெரேரா எதிர் வரும் தொடர்களில் இணைத்து கொள்ளப்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளதாக ஸ்ரீலங்கா கிரிக்கெட் மருத்துவ குழு தெரிவித்துள்ளது.

அவர் தற்போது சிறந்த உடற் தகைமையுடன் உள்ளதாக ஸ்ரீலங்கா கிரிக்கெட் மருத்துவ குழுவின் பிரதானி பேராசிரியர் அர்ஜுன டி சில்வா தெரிவித்துள்ளார்.

2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தின் பின்னர் குஷல் ஜனித் பெரேரா சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்றிருக்கவில்லை. இந்தநிலையில் நியூசிலாந்து அணிக்கெதிரான தொடரில் அவர் இணைத்துக் கொள்ளப்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளதாக கூறப்படுகின்றது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

DLB
அபிவிருத்தி லொத்தர்

# 40 வருட அபிமானம்!

மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நிதியத்தினால் மாணவர்களின் கல்விக்கண்ணை திறந்து..

நோயாளர்களை குணப்படுத்துவதன் மூலம் சுகாதார துறையின் மேன்மைக்காக செயற்படும்..

அனைத்து திசைகளிலும் கோடீஸ்வரர்கள், இலட்சாதிபதிகளை உருவாக்கி இலங்கை மக்களின் வாழ்க்கைக்கு ஒளியூட்டிய

## அபிவிருத்தி லொத்தர் வெற்றிகரமாக 40 வது ஆண்டினை கடந்து

மென்மேலும் புதியனவற்றினை கொண்டுவருவதுடன் உங்களுக்காக முன்னோக்கி..

அதற்காக அர்ப்பணிப்புடன் எம்மோடு கை கோர்த்துள்ள அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் விநியோக விற்பனை முகவர்கள் மற்றும் விற்பனை முகவர் வலையமைப்பின் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவிக்கின்றோம்.



40 DLB DEVELOPMENT LOTTERIES Anniversary

அபிவிருத்தி லொத்தர் சபை

(C-1910)

இல-356, கலாநிதி கொல்வின் ஆர்.டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ் கொழும்பு 02. தொலைபே இல - 0114 824 824

www.dlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல்வதைக் காட்டிலும் செய்வதே சிறந்தது

## யாழ்.அரச அதிபர் சிவபாலசுந்தரன்

**(யாழ்ப்பாணம்)**
**யாழ். மாவட்டத்திற்கு தேவையானதை அறிந்து செயற்பட வேண்டியதை செய்வோம் என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.**



யாழ்ப்பாண மாவட்ட புதிய அரசாங்க அதிபராக நேற்று யாழ்.மாவட்ட செயலகத்தில், மாவட்ட அரசாங்க அதிபர் அலுவலகத்தில் தமது கடமைகளை பொறுப்பேற்றார்.

இதனைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இதனை தெரிவித்தார்.

மேலும் கருத்து தெரிவிக்கையில், நான் புதிய அரசாங்க அதிபராக கடமையேற்றுள்ளேன். நான் எதிர்பார்க்கின்றேன் என்ற சொல்லை விட செயற்றிறன் நல்லம் என்று கூறுகிறேன். அதனை செய்வோம் - என தெரிவித்தார்.

இவ் வரவேற்கும் நிகழ்வில் வடமாகாண பிரதம செயலாளர் சமன் பந்துல சேன, யாழ். மாவட்ட மேலதிக செயலாளர் ம.பிரதீபன், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) எஸ்.முரளிதரன். திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. நிக்லஸ்பிள்ளை மோகனதாஸ் மற்றும் மாவட்ட திணைக்கள பதவி நிலை உயர் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.(4-6-104)

# யாழ்.அரச அதிபராக சிவபாலசுந்தரன் பொறுப்பேற்றார்



(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாண மாவட்ட செயலாளராக அ.சிவபாலசுந்தரன் நேற்று புதன்கிழமை தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் முற்பகல் 10 மணிக்கு இடம்பெற்ற விசேட நிகழ்வில் பதில் மாவட்ட செயலாளர் ம.பிரதீபனிடம் இருந்து கடமைகளை புதிதாக நியமனம் பெற்ற மாவட்ட செயலாளர் பொறுப்பேற்றார். (4-6-33-104)

# அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்டுப்பணம் செலுத்தியது

(யாழ்ப்பாணம்)
அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ளூராட்சிமன்ற தேர்தலுக்கான கட்டுப்பணத்தை நேற்று செலுத்தியது.

முற்பகல் 11 மணியளவில் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்திலுள்ள தேர்தல்கள் அலுவலகத்தில் சட்டத்தரணி ந.காணடீபன் தலைமையிலான குழு கட்டுப்பணத்தை செலுத்தியது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் சகல சபைகளுக்கும் போட்டியிடவுள்ளதாக சட்டத்தரணி ந.காண்டீபன் தெரிவித்தார். இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்திலும் கட்டுப்பணம் செலுத்தப்பட்டது. (4-6-33-100)





தமிழக முன்னாள் முதல்வர் எம்.ஜி.ராமச்சந்திரனின் 106 ஆவது பிறந்த தின நிகழ்வு நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் கல்வியங்காடு செங்குந்தா பொதுச்சந்தை வளாகம், குருநகர் ஆகிய இடங்களில் மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. (படங்கள்- சிவசாந்தன், ஏனெஸ்ட்)

# சீன மக்களின் நன்கொடை வலி.வடக்கில் வழங்கி வைப்பு

(யாழ்ப்பாணம்)
இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்திற்கு சீன மக்களால் நன்கொடையாக வழங்கப்பட்ட உலர் உணவுப் பொருட்கள் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் வலி.வடக்குப் பிரிவினரால் தெரிவு செய்யப்பட்ட 100 பயனாளிகளுக்கு தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தில் வைத்து நேற்று வழங்கப்பட்டது. இந் நிகழ்வில் தெல்லிப்பழை பிரதேச செயலர், உப செயலர், பிரிவுத் தலைவர், பிரிவுச் செயலாளர், உறுப்பினர்கள் மற்றும் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.(4-6)

# ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரியின் விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)
புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி - 2023 இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி விளையாட்டு மைதானத்தில் கல்லூரி முதல்வர் சி. திரிகரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக உயர்பட்டப்படிப்புக்கள் பீட விரிவுரையாளர் பிரம்ம ஸ்ரீ ப. சிவானந்த சர்மா, யாழ்.வலய உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் ந.சிறிமுருகதாஸ்காந்தன் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ளனர். (4-6)

## சாவகச்சேரியில்
# சந்தேகத்திற்கிடமான முறையில் தங்கியிருந்த ஐவர் கைது

(சாவகச்சேரி)
சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட உதயசூரியன் கிராமத்தில் சந்தேகத்திற்கிடமான முறையில் தங்கியிருந்த ஐவர் அண்மையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாடசாலையை விட்டு இடைவிலகியோரை கண்டுபிடித்தல், இளவயதுத் திருமணத்தை தடுத்தல் மற்றும் சட்டவிரோத செயற்பாடுகளை தடுத்து நிறுத்தல் உள்ளிட்டவற்றை நோக்காகக் கொண்டு அண்மையில் உதயசூரியன் கிராமத்தில் பிரதேச செயலகம் மற்றும் பொலிஸார் உள்ளடங்கிய சமூகப் பாதுகாப்புக் குழுவினரால் நடத்தப்பட்ட சோதனையின் போதே 15 வயதுச் சிறுமி ஒருவர் உட்பட ஐந்து பேர் கைது செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கைதான ஐவரும் கிளிநொச்சிப் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. இந் நிலையில் கைது செய்யப்பட்ட சிறுமியை நீதிமன்ற உத்தரவுடன் மருத்துவ பரிசோதனைகளுக்காக மருத்துவமனையில் அனுமதித்த பின்னர் சீர்திருத்த பள்ளியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அதேவேளையில் பிரதான சந்தேகநபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டு ஏனைய மூவரும் பிணையில் விடுவிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (4-6-30)

# சாவகச்சேரியில் விபத்து மூவர் படுகாயம்

(சாவகச்சேரி)
சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தனங்கிளப்பு ஏ-32 வீதியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் இடம்பெற்ற மோட்டார்சைக்கிள் விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

இவர்கள் பயணித்த மோட்டார்சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்த நிலையில் குறித்த விபத்து சம்பவித்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

விபத்தில் படுகாயமடைந்த மூவரும் வீதியில் கிடந்த நிலையில் பொதுமக்களால் மீட்கப்பட்டு சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்ப்பிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனாமருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-6-30)

# பொங்கல் அன்று மோதல் ஐவர் மருத்துவமனையில்

(அராலி)
வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அராலி - மாவத்தை பகுதியில் கடந்த 15 ஆம் திகதி இடம்பெற்ற குழு மோதலில் இரு குழுக்களைச் சேர்ந்த ஐவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகக் கூறப்படுகிறது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

குறித்த பகுதியில் பொங்கல் திருவிழா அன்று விளையாட்டு நிகழ்வுகள் நடைபெற்றன. இறுதியில் கயிறு இழுத்தல் போட்டி நடைபெற்றது.

இதன்போது இரு குழுக்களிடையே மோதல் ஏற்பட்டுள்ளது. இந்த மோதலில் ஐவர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரு கின்றனர்.

இச்சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை வட்டுக்கோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(4-6-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்த, கோட்டாவுக்கான
# கனடாவின் பொருளாதார தடைகளை ஏனைய நாடுகளும் பின்பற்ற வேண்டும்

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்து



**(கொழும்பு)**

**இலங்கையின் முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஷ மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோருக்கு எதிராக கனடாவின் பொருளாதாரத் தடைகளை, ஏனைய நாடுகளும் பின்பற்ற வேண்டும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.**

மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசிய பணிப்பாளர் மீனாட்ஷி கங்குலி இந்த வலியுறுத்தலை விடுத்துள்ளார். பாரதூரமான குற்றங்களுக்குப் பொறுப்பானவர்களை அவர்களின் தலைமைப் பாத்திரம் எதுவாக இருந்தாலும் அவர்களுக்கு எதிராக நீதியை உறுதிப்படுத்துவதற்கான முதன்மைப் பொறுப்பு இலங்கை அரசாங்கத்திடம் உள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

1983 முதல் 2019 வரையான காலப்பகுதியில் இலங்கை அரசாங்கத்திற்கும் பிரிவினைவாத தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடந்த உள்நாட்டுப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட "மொத்த மற்றும் முறையான ம்னித உரிமை மீறல்களில்" சம்பந்தப்பட்டவர்கள் என்ற அடிப்படையில் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஷ மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் இரண்டு முன்னாள் இராணுவத்தினருக்கு எதிராக கனேடிய அரசாங்கம் பொருளாதார தடைகளை விதித்துள்ளது.

இந்தநிலையில் சர்வதேச சட்டத்தை மீறுபவர்களுக்கு எதிரான சர்வதேச தண்டனை தவிர்ப்பை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு தமது நாடு தீர்க்கமான நடவடிக்கை எடுத்துள்ளது என்று கனேடிய வெளிவிவகார அமைச்சர் மெலனி ஜோலி தெரிவித்திருந்தார்.

இந்த நடவடிக்கைகளில் பயணத் தடைகள் மற்றும் சொத்து முடக்கம் ஆகியவை அடங்கும் என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார். இந்த சூழ்நிலையில், இலங்கையில் இடம்பெற்ற உரிமை மீறல்களுக்கு பொறுப்புக்கூறல் தொடர்பில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை விடுத்த கோரிக்கைகள் நீண்டகாலமாக கவனிக்கப்படாமல் இருப்பதாக மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசிய பணிப்பாளர் மீனாட்சி கங்குலி சுட்டிக்காட்டியுள்ளார்

எனவே இலங்கையின் மொத்த மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்களில் நம்பகத்தன்மையுடன் குற்றம் சாட்டப்பட்ட குற்றவாளிகளுக்கு எதிராக மேலும் இலக்கு வைக்கப்பட்ட தடைகளை ஆராயுமாறு சர்வதேச அரசாங்கங்களை அவர் மீண்டும் வலியுறுத்தியுள்ளார். (நி)

# உயர்தரப் பரீட்சைக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி

## பரீட்சை ஆணையாளர் நாயகம்

(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதர உயர் தரப் பரீட்சைக்கு அனைத்து ஏற்பாடுகளும் தயாராக உள்ளதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

2022 கல்வியாண்டுக்கான ,கல்விப் பொதுத் தராதர உயர் தரப் பரீட்சை எதிர்வரும் 23 ஆம் திகதி முதல் பெப்ரவரி 17 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

செல்லுபடியாகும்அடையாள அட்டை அல்லது அனுமதி அட்டை இல்லாவிட்டாலும் பரீட்சைக்கு தோற்ற முடியும் என பரீட்சைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

1911 அவசர தொலைபேசி இலக்கம், 011 2784 208, 011 2784 537, 011 2785 211 மற்றும் 011 2786 616 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் 24 மணிநேரமும் பரீட்சை பிரச்சினைகள் மற்றும் முறைகேடுகள் தொடர்பாகத் தெரிவிக்கும் வகையில் இயங்கி வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (நி)


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: உத்தரம் 3
கி.பா: 48 ½ சூரி 10 செவ் 7 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: A/L (மின்சார சபை)
எதிர்பார்ப்பு: படித்த மணமகள் உள்நாடு மட்டும்
தொ.இ: B/13270

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி 3
கி.பா: 19 ½ சூரி. செவ் 3 இல்
உயரம் :5'6"
தகைமை/தொழில்: N.C.T Civil Engineer Draughtsman
எதிர்பார்ப்பு: படித்த பெண் உள்நாடு மட்டும்
தொ.இ: B/13272

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: பூரம் 2
கி.பா: 30 1/4 சூரி 7 செவ் 6 இல்
உயரம்: 178 cm
தகைமை/தொழில்: BSc QS
எதிர்பார்ப்பு: படித்தபெண்
தொ.இ: B/13273

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: திருவோணம் 4
கி.பா: சூரி 12 செவ் 2 இல்
உயரம்: 5'9"
தகைமை/தொழில்: A/L இலங்கை விமானப்படை சிவில் ஊழியர்
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/13274

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: மகம் 2
கி.பா:100 சூரி ,செவ் 8 இல்
உயரம்:158 cm
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: அரச ,தனியார் தொழில்
தொ.இ: G/11766

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: அனுசம் 3
கி.பா: 29 3/4 சூரி 3 செவ் 4 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: ஆசிரியர்
எதிர்பார்ப்பு: பட்டதாரி அரச, தனியார் தொழில்
தொ.இ: G/11778

பிறப்பு: 1987 கிறிஸ்தவம் RC
உயரம்: 5'1"
தகைமை/தொழில்: ஆசிரியர்
எதிர்பார்ப்பு :அரச. தனியார் உத்தியோகம்
தொ.இ: G/11781

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: மூலம் 4
கி.பா: 28 ½ சூரி 11 செவ் 9 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: BA பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகம்
தொ.இ: G/11783

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


# 70 ஆயிரம் குடும்பங்களுக்கு பால்மா

(கொழும்பு)

பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள 70 ஆயிரம் குடும்பங்களுக்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள 'உணவு பாதுகாப்பு மற்றும் போஷாக்கு தொடர்பான தேசிய கூட்டுப் பொறிமுறை' ஊடாக 174 மில்லியன் ரூபாய் பெறுமதியான பால்மாவை பெற்றுக் கொடுக்க பொன்டெரா நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

நியூசிலாந்து உயர்ஸ்தானிகர் மைக்கல் எப்பல்டன் உள்ளிட்ட அதிகாரிகள் இப்பால்மாவை நேற்று முன்தினம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் ஜனாதிபதி அலுவலகத்தில் உத்தியோகப்பூர்வமாக கையளித்தனர். (நி)


# பாராட்டி வாழ்த்துகிறோம்



திருமதி.தனுசியா சுகிர்தன்
(NDT,B.Ed)

Best Wishes

27.12.2022 அன்று BMICH, கொழும்பில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கல்விமாணிப் பட்டத்தை (B.Ed) பெற்றுக் கொண்ட எமது கல்லூரி ஆசிரியர்களை பாராட்டுவதுடன் அவர்கள் மேலும் பல பட்டங்களைப் பெற்று உயர் பதவிகளில் சிறப்புடன் வாழ வாழ்த்துகிறோம்.

ஆசிரியர் கழகம்
யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி



திருமதி.கீர்த்திகா ரமணன்
(NDT,B.Ed)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜேர்மனியில் போராட்டத்தில் ஈடுபட்ட கிரேட்டா துன்பெர்க் கைது



(பெர்லின்)

ஜேர்மனியில் போராட்டத்தில் ஈடுபட்ட காலநிலை மாற்ற ஆர்வலர் கிரேட்டா துன்பெர்க் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கார்ஜ்வெய்லர் சுரங்கத்தின் விரிவாக்கத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்ட நிலையிலேயே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதில் கலந்து கொண்ட கிரேட்டா துன்பெர்க் மற்றும் போராட்டக்காரர்கள் சுரங்கத்தின் ஆபத்தான இடத்தில் நின்று போராட்டத்தில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (நி)

## உலகின் மிக வயதான நபர் காலமானார்





(பாரிஸ்)

உலகின் மிக வயதான நபர் நேற்றுக் காலமானார்.

அருட்சகோதரி லூசில் ரென்டன் என அறியப்பட்ட இக் கன்னியஸ்திரி தனது 118 ஆவது வயதில் நேற்று முன் தினம் காலமாகியுள்ளார்.

உலகின் மிக வயதான நபராக இவரை கின்னஸ் சாதனை வெளியீட்டாளர்களும் உத்தியோகபூர்வமாக அறிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

# மின்னலின் பாதையை மாற்றியமைத்த விஞ்ஞானிகள்



(பாரிஸ்)

வானில் தோன்றிய மின்னலின் பாதையை லேசர் உதவியுடன் விஞ்ஞானிகள் மாற்றியமைத்து வெற்றி பெற்றுள்ளனர்.

வானில் தோன்றும் மின்னலை தடுப்பதற்கான மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைக்கான புதிய முயற்சியில் ஆராய்ச்சியாளர்கள் ஈடுபட்டு உள்ளனர்.

விஞ்ஞானி பெஞ்சமின் பிராங்ளின் என்பவர் 1752 ஆம் ஆண்டு மின்னல் மற்றும் மின்சாரத்திற்கு இடையேயான தொடர்பு பற்றி விளக்கினார்.

இதன் அடிப்படையில் விஞ்ஞானிகள் மின்னலை தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் பரிசோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த முறை லேசர் உதவியுடன் அதனை முயன்று பார்த்து உள்ளனர். இதில், பிரான்ஸ் நாட்டை சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள், சுவிட்சர்லாந்து நாட்டின் வடகிழக்கில் அமைந்த சாண்டிஸ் மலை பகுதியின் உச்சியில் இருந்து மின்னலின் பாதையை மாற்றியமைத்து அதில் வெற்றி பெற்றுள்ளனர். (நி)

# உக்ரைனில் உலங்கு வானூர்தி விபத்து அமைச்சர் உட்பட 16 பேர் உயிரிழப்பு

## 22 பேர் படுகாயம்



(கீவ்)

உக்ரைன் தலைவர் கீவ்வின் புறநகர் பகுதியில் உலங்கு வானூர்தியொன்று விபத்துக்குள்ளானதில் அந்த உள்நாட்டலுவல்கள் அமைச்சர், பிரதியமைச்சர் உட்பட 16 பேர் கொல்லப்பட்டதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன், சிறுவர்கள் இருவரும் பலியானவர்களில் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டலுவல்கள் அமைச்சர் டெனிஸ் மொனாஸ்டிர்ஸ்கி, அவரது பிரதியமைச்சர் யெவன் யெனின் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் மாநில செயலாளர் யூரி லுப்கோவிச் ஆகியோரும் கொல்லப்பட்டவர்களில் அடங்குவர் என்று உக்ரைனின் தேசிய பொலிஸார் தெரிவித்தனர்.

உக்ரைனிய தலைநகரின் கிழக்கு புறநகர்ப் பகுதியான ப்ரோவரியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இது விபத்தா? அல்லது ரஷ்யாவுடனான 11 மாத யுத்தத்தின் விளைவாக ஏற்பட்டதா? என்பது குறித்து உடனடி தகவல் எதுவும் தெரியவரவில்லை.

முன்பள்ளியொன்று அருகே



இந்த உலங்கு வானூர்தி விபத்துக்குள்ளானதாக இந்த சம்பவத்தில் 10 சிறுவர்கள் உட்பட 22 பேர் படுகாயமடைந்துள்ளதாகவும் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (நி)

# இந்தியக் குடியரசு தினத்தில் தாக்குதல்; பயங்கரவாதிகளின் சதித்திட்டம் முறியடிப்பு

(டில்லி)

இந்திய குடியரசு தினத்தை முன்னிட்டு, நாட்டின் பல்வேறு இடங்களில் தாக்குதல் நடத்த இருந்த பயங்கரவாதிகளின் சதித்திட்டம் முறியடிக்கப்பட்டுள்ளது.

டில்லியில் கடந்த வாரம் ஜஹாங்கீர்புரியில் துண்டிக்கப்பட்ட நிலையில் இருந்த உடலை மீட்ட சிறப்பு பிரிவு பொலிஸார், பயங்கரவாதிகள் என சந்தேகிக்கப்பட்ட இருவரை கைது செய்து விசாரணை மேற்கொண்டனர்.

அதில், பல்வேறு இடங்களில் தாக்குதல் நடத்த பயங்கரவாதிகள் திட்டமிட்டதும், டில்லி மற்றும் பஞ்சாப்பில் உள்ள தலைவர்களை குறிவைத்து சதித்திட்டமிட்டதும் தெரிய வந்தது.

பாகிஸ்தானிலிருந்து ஆயுதங்கள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் 8 பேர் இந்த திட்டத்தில் ஈடுபட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

ஏற்கனவே இருவர் கைதான நிலையில், மேலும் 4 பேரை தேடி வருவதாகவும் டில்லி பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி)

# பதவி விலகினார் வியட்நாம் ஜனாதிபதி



(வியட்நாம்)

வியட்நாம் ஜனாதிபதி நுயென் ஸுவான் புக் பதவி விலகியுள்ளார்.

ஊழல் விவ காரங்கள் காரணமாக ஜனா திபதி நுயென் ஸுவான் புக் பதவியிலிருந்து நீக்கப்படலாம் என கடந்த சில தினங்களாக செய்திகள் வெளியாகிய நிலையில், அவர் இராஜினாமா செய்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அவரின் கீழ் பணியாற்றிய அதிகாரிகள் பலர் விதிமுறை மீறல்களில் ஈடுபட்டுள்ளதாகவும் தவறுகளை இழைத்துள்ளதாகவும் வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சி குற்றம் சுமத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# இந்தோனேசியாவில் நிலநடுக்கம்

(இந்தோனேசியா)

இந்தோனேசியாவின் சுலாவேசி பகுதிகளில் நேற்று அதிகாலை சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. நிலநடுக்கத்தால் பொருட்சேதம், உயிர்சேதம் குறித்த தகவல்கள் வெளியாகவில்லை. பசிபிக் படுகையில் உள்ள எரிமலைகள் மற்றும் பூமத்திய கோடுகளின் வளைவான "ரிங் ஆப் பயர்" மீது இந்தோனேசியா இருப்பதால் அடிக்கடி பூகம்பங்கள் மற்றும் எரிமலை வெடிப்புகளால் பாதிக்கப்படுகிறது.

இந்நிலையில், இந்தோனேசியாவின் சுலாவேசி பகுதிகளில் அதிகாலை சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

இந்த நிலநடுக்கத்தால் சுனாமி எச்சரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை. (நி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மன்னார் மாவட்டத்தில்

# மருந்து தட்டுப்பாட்டை நீக்கக் கோரி மருத்துவ சமூகம் போராட்டம்



(மன்னார்)
அத்தியாவசிய மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் உடனடியாக மக்களுக்கு கிடைக்க வழி செய்ய வேண்டும் என கோரி அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் மற்றும் பல் வைத்திய அதிகாரிகள் சங்கம் இணைந்து நேற்று புதன்கிழமை மன்னார் பொது மருத்துவமனைக்கு முன்பாக அடையாள கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

ஆட்சியாளர்களே! அரச மருத்துவமனைகளில் மருந்து மற்றும் மருத்துவ உபகரணங்களின் தட்டுப்பாட்டை உடனடியாக தீர்க்கவும்.வான் உயரத்தில் பணவீக்கம் நடுவீதியில் உத்தியோகஸ்தர்கள்.திறனற்ற சுகாதார அமைச்சால் இலவச மருத்துவம் வீழ்ச்சி, சுகாதாரத்திற்கான பண ஒதுக்கீட்டில் கைவைக்காதே,சுகாதார கட்டமைப்பு சீர்குலைந்துள்ளது, போன்ற பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்

தங்களது நியாயமான கோரிக்கை அரசாங்கத்தினால் விரைவில் தீர்க்கப்படவில்லை என்றால் ஏனைய தொழிற்சங்கங்களுடன் இணைந்து பாரியதொரு தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என போராட்டத்தில் ஈடுபட்ட ஊழியர்கள் எச்சரித்துள்ளனர் .இதேவேளை குறித்த போராட்டமானது கிளிநொச்சியிலும் முன்னெடுக்கப்பட்டது.(4-6-100-285)

# கிளிநொச்சியில் தமிழரசுக் கட்சி வேட்புமனு தாக்கல் செய்தது



(முறிகண்டி)
இலங்கை தமிழரசுக் கட்சி தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் செய்தது. நேற்று பகல் 12 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் வேட்புமனு கையளிக்கப்பட்டது.

கரைச்சி, பச்சிலைப்பள்ளி பிரதேச சபைகளில் போட்டியிடுவதற்கான வேட்புமனு பாராளுமன்ற உறுப்பினர் எஸ் சிறிதரன் தலைமையில் கையளிக்கப்பட்டது.

பூநகரி பிரதேச சபைக்கான வேட்புமனு நாளை வெள்ளிக்கிழமை வழங்கப்படவுள்ளது. (4-6-100-315-316)

# ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி மன்னாரில் கட்டுப்பணம் செலுத்தியது

(மன்னார்)
நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக வன்னி தேர்தல் தொகுதியில் மன்னார் மாவட்டத்திற்கான கட்டுப்பணத்தை ஐந்து கட்சிகள் உள்ளடக்கிய ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி நேற்று செலுத்தியது.

மன்னார் நகர சபை, மன்னார்,நானாட்டான்,முசலி,மாந்தை மேற்கு ஆகிய பிரதேச சபைகள் உள்ளிட்ட மன்னார் மாவட்டத்தில் உள்ள 5 உள்ளூராட்சி மன்றங்களுக்குமான கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளது. (4-6-285)

# பளை மத்திய கல்லூரிக்கு புதிய அதிபர் நியமனம்

(தருமபுரம்)
கிளி/பளை மத்திய கல்லூரி தேசிய பாடசாலையின் புதிய அதிபராக அதிபர் தரம் 1 ஐச் சேர்ந்த கே.இரவீந்திரா வட மாகாணக் கல்வியமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்பட்டு கடந்த புதன் கிழமை தனது கடமைகளை பொறுப்பேற்றார். (4-6-316)

# காட்டு யானைகளால் நெற்பயிர்கள் அழிவு

விவசாயிகள் கவலை



(தருமபுரம்)
உடையார் கட்டு கமநல சேவை பிரிவுக்கு உட்பட்ட விசுவமடு மேற்கு பகுதியில் 450 ஏக்கர் பெரும்போக பயிர் செய்கையில் ஈடுபட்டு வரும் 20க்கும் மேற்பட்ட விவசாயிகளின் நெற் பயிர்களை யானைகள் மேய்ந்துள்ளன.

காட்டு யானைகளை துரத்துவதற்கு பெரிதும் சிரமப்படுவதாகவும் தீ மூட்டி யானைகளை விரட்டுவதுடன் வயல் நிலங்களில் கொட்டகைகள் அமைத்து தங்கி நிற்கும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.அத்துடன் பகல் வேளைகளில் மாடுகள் மற்றும் குரங்குகள் நெற்கதிர்களை மேய்ந்து வரும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

ஒருபோதும் இல்லாதவாறு இம்முறை பெரும்போக பயிர்ச்சியில் பல இன்னல்களை அனுபவித்து வருவதாகவும் விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர். (4-6-316)

# கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை- ஒருவர் கைது



(நெளுக்குளம்)
வவுனியாவில் கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகையிடப்பட்டதுடன், சந்தேக நபர் ஒருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற குறித்த முற்றுகை சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

வவுனியா கற்பகபுரம் பகுதி யில் சட்டவிரோத மதுபானம் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றமை தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டிற்கமைவாக வவுனியா மதுஒழிப்பு பொலிஸார் சோதனை நடவடிக்கையை மேற்கொண்டிருந்தனர்.

அப்பகுதியை சுற்றி வளைத்த பொலிஸார் இதன்போது கசிப்பு காய்ச்சுவதற்கு தயாரான நிலையில் வைக்கப்பட்டிருந்த ஒரு பெரல் "கோடா" , கசிப்பு உற்பத்தி மேற்கொள்ள பயன் படுத்தப்படும் உபகரணங்கள் ஆகியனவும் கைப்பற்றப்பட்டதுடன் உற்பத்தியில் ஈடுபட்டிருந்த கற்பகபுரம் பகுதியை சேர்ந்த 36 வயதுடைய நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரையும், மீட்கப்பட்ட உபகரணங்களும் வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (4-6-299)

# மது போதையில் நின்றவர்களால் மாணவர்கள் மீது தாக்குதல்

ஒருவர் கைது


(அக்கராயன்)
பாடசாலை மாணவர்கள் மது போதையில் இருந்தவர்களினால் தாக்கப்பட்டமை தொடர்பாக நான்கு பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த மூன்று நாட்களுக்கு முன்னர் கிளிநொச்சி கண்ணகைபுரம் கிராமத்தில் இருந்து முக்கொம்பன் மகா வித்தியாலயத்திற்கு வருகை தந்த மாணவர்களை வழியில் மது போதையில் நின்ற நான்கு பேர் தடிகளால் தாக்கியுள்ளனர்.

இந்நிலையில் அக்கராயன் பொலிஸாரினால் ஒருவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் மூவர் கைது செய்யப்படவில்லை என பெற்றோர்களினால் தெரிவிக்கப்படுகின்றது.

தாக்குதலினால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் பலர் பாடசாலைக்கு வரவில்லை எனவும் மாணவர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர். (4-6-350)

# குளத்தினை ஆழப்படுத்துமாறு கிராமமக்கள் கோரிக்கை



(அக்கராயன்)
முல்லைத்தீவு கரைதுறைப்பற்று புதரிகுடா கிராமத்தின் குளத்தினை ஆழப்படுத்துமாறு கிராம மக்களினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. 196 குடும்பங்கள் வாழ்கின்ற இக் கிராமத்தில் குளம் முக்கியமானதாகும்.

இக்குளத்தில் காணப்படுகின்ற தாழை மரங்கள் அகற்றப்பட்டு குளத்தினை ஆழப்படுத்த வேண்டும்.

அத்துடன்குளத்தின்அணைக்கட்டினையும் உயர்த்த வேண்டும். இதன் மூலம் 30 ஏக்கர் வரையான நிலப்பரப்பில் விவசாய முயற்சிகள் மேற்கொள்ள முடியும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-6-350)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாரத்தை பரவலாக்கினால் நாட்டில் இரத்த ஆறு ஓடும்

## சரத் பொன்சேகா

(கொழும்பு)

**13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி, அதிகாரப் பரவலாக்கலை மேற்கொண்டால், மீண்டும் நாட்டில் பயங்கரவாதம் தலைதூக்கும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.**



பாராளுமன்றில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்ட அவர், "இன்று இந்த நாடு வங்குரோத்து அடைந்துள்ளது. ஐ.எம்.எப். தொடர்பாக பேசுகிறோம். கடன் மறுசீரமைப்பு தொடர்பாக பேசுகிறோம். ஆனால், கடந்த 6 மாதங்களில் இந்நாட்டில் பொருளாதார முன்னேற்றம் ஏற்படவில்லை என்பதே உண்மையாகும்.

இன்னும் 25 வருடங்களில் நாடு முன்னேறி விடும் என ஜனாதிபதி கூறிவருகிறார். இன்னும் 25 வருடங்களில் தற்போதைய ஜனாதிபதிக்கு 99 வயதாகி விடும். எனக்கோ 97 வயதாகி விடும். அதுவரை நாம் கடுமையான வாழ்க்கைச் சுமையைதான் சுமக்க வேண்டியிருக்கும்.

எமது எதிர்கால சந்ததியினரும் இதனால் பாதிக்கப்படுவார்கள்.

இந்த நிலையில், ஜனாதிபதியோ குழும்பியக் குட் டையில் மீன் பிடிக்க முற்பட்டுக் கொண்டிருக்கிறார். 13 ஆவது திருத்தச் சட்டம் குறித்து இன்று பேசுகிறார்கள்.

தமிழ் மக்களும் சிங்கள மக்களும் இன்று உணவுக்கே சிரமப்படும் நிலையில், அரசியல் இலாபத்தைத் தேடிக்கொள்ளத் தான் ஜனாதிபதி 13 குறித்து பேசி வருகிறார்.

முன்னாள் மாகாண முதல்வர்கள் அனைவரும் காணி - பொலிஸ் அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு கிடைப்பதை வரவேற்பதாக ஜனாதிபதி அண்மையில் தெரிவித்திருந்தார்.

இது முற்றிலும் பொய்யான கருத்தாகும். தெற்கிலுள்ள எந்தவொரு முதல்வரும் இவற்றை எதிர்ப்பார்த்தது கிடையாது.

வடக்கு - கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள், நாடு இன்று இருக்கும் நிலைமையில் இவ்வாறான கோரிக்கைகளை விடுத்து பாவத்தை தேடிக்கொள்ள வேண்டாம் என நாம் கேட்டுக் கொள்கிறோம்.

13 ஐ முழுமையாக கொடுப்பதாயின், அதிகாரத்தை பரவலாக்கல் செய்வதாயின், முதலில் இந்த நாடு அபிவிருத்தி அடைந்த் நாடாக மாற்றமடைய வேண்டும்.

இனவாதம் இந்நாட்டில் இருக்கும் போது, அதிகாரத்தை பரவலாக்கினால் மீண்டும் நாட்டில் பயங்கரவாதம் தலைதூக்கும்.

இரத்த ஆறு ஓடும். தெற்கு மக்கள் வடக்கு மக்களை குரோதத்துடன் பார்ப்பார்கள், தெற்கிலும் வடக்கிலும் மீண்டும் பிரச்சினைகள் ஏற்படும்.

எனவே, இவ்வாறான செயற்பாடுகளுக்கு ஜனாதிபதி இடமளிக்கக்கூடாது என்று நான் ஜனாதிபதியிடம் கேட்டுக்கொள்கிறேன்.' எனத் தெரிவித்துள்ளார். (ஙி)

# தடம்புரண்டது ரயில்




(கொழும்பு)

அவிசாவளையிலிருந்து கொழும்பு கோட்டை நோக்கிச் சென்ற ரயில் ஒன்று நேற்றுக் காலை தடம் புரண்டது.

இந்தச் சம்பவத்தால்பயணிக்ள் எவருக்கும் காயம் ஏற்படவில்லை. (ஙி)


# கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி ஆசிரியை
திருமதி.காமினி நாகேந்திரராஜா
அவர்களின் அன்பு மாமனார்

அமரர். திரு. **மாணிக்கர்**
**வேலாயுதபிள்ளை**

*17.01.2023* அன்று காலமானதையிட்டு
அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு
ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதுடன் அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
(14312)

ஆசிரியர் கழகம் , யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி


# இராசிபலன்

19.01.2023
தை 05 வியாழக்கிழமை
துவாதசி முற்பகல் 10.01 மணிவரை
கேட்டை பிற்பகல் 12.31 மணிவரை

சுபநேரம் 8.05-09.35 மணிவரை
இராகுகாலம் 02.05-03.35 மணிவரை

சந்திராஷ்டமம் - கார்த்திகை, ரேவதி
பிரதோச விரதம்

**வளவன்**


மேஷம்

அச்சுறுத்தல்கள் அகன்று ஆனந்தம் கூடும் நாள், பெரிய மனிதர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.


கடகம்

பல நாட்களாக செய்ய நினைத்த செயலொன்றை இன்று செய்து முடிப்பீர்கள், பகையொன்று நட்பாகலாம், சுபநிகழ்வுகளில் புதியவர்கள் சந்திப்பு இடம்பெறலாம்.


துலாம்

உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும்.


மகரம்

திட்டமிட்ட காரியங்களில் திசைதிருப்பங்கள் ஏற்படலாம், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும் நாள், குடும்ப ஒற்றுமைக்கு பெரியவர்களின் ஆலோசனையினைக் கேட்டு நடப்பது நல்லது,


ரிஷபம்

குடும்பத்தில் சிறுசிறு கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும், விரயங்கள் மேலோங்கும் நாள், உடல்நலன் பற்றிய கவலை உருவாகி மறையும், பிரயாண பயமுண்டு.


சிம்மம்

அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பிள்ளைகளின் வழியில் பெருமைகள் கூடும், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.


விருச்சிகம்

நண்பர்களின் ஒத்துழைப்பால் நலம் காண்பீர்கள், வருங்கால நலன்கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், தொழில் வளர்ச்சி கூடும் நாள்.


கும்பம்

குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், எந்தக் காரியத்தையும் எளிதில் செய்து முடிப்பீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், பயணங்கள் கைகூடும்.


மிதுனம்

நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள், கல்யாணக் கனவுகள் நனவாகலாம், போசன சுகமுண்டு.


கன்னி

விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், கடன்சுமை குறையும் நாள், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், இல்லத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள்.


தனுசு

விருப்பங்கள் நிறைவேற பரம்பொருளை வழிபட வேண்டிய நாள், திடீர் பயணங்களால் வழக்கமான பணிகளில் சுணக்கம் ஏற்படலாம், உடல் நலனில் கவனம் தேவை.


மீனம்

தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், மற்றவர்கள் மத்தியில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**நேர்மைக்கு பலன் கிடைக்கும். ஆனால் நெடுநாள் காத்திருக்க வேண்டும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோற்றது 'மொட்டு' அல்ல; இம்முறையும் நிரூபிப்போம்

## மார் தட்டுகிறார் மகிந்த



(கொழும்பு)

"எந்தத் தடைகளும் இன்றி உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடந்தால் அதில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவே வெற்றியடையும்" என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் தொடர்பில் கட்சியின் முக்கியஸ்தர்களுடன் நேற்று முந்தினம் நடத்திய கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"உள்ளூராட்சி சபைத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் என எந்தத் தேர்தல் நடந்தாலும் அதனை எதிர்கொள்ள ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன தயாராகவுள்ளது.

எந்தத் தேர்தல் நடந்தாலும் எமது கட்சியே வெற்றியடையும். அந்த நம்பிக்கையுடன் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை நீங்கள் முன்னெடுக்க வேண்டும்.

தேர்தலில் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன ஒருபோதும் தோற்ற கட்சி அல்ல. அதை எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலிலும் நாம் நிரூபித்துக் காட்ட வேண்டும்.

எதிர்க்கட்சிகளின் விமர்சனங்களுக்குச் செவிசாய்க்காமல் மக்கள் மத்தியில் பிரசாரங்களை முன்னெடுக்க வேண்டும். மக்களுக்கு உண்மை நிலைமையை நாம் தெளிவுபடுத்த வேண்டும்" என அவர் தெரிவித்தார். (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 350 | 350 | 400 |
| உருளைக்கிழங்கு | 150 | 150 | 140 | 150 |
| பச்சைமிளகாய் | 370 | 400 | 400 | 400 |
| தக்காளி | 220 | 200 | 240 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 180 | 190 | 200 |
| கோவா | 80 | 120 | 140 | 150 |
| கரட் | 250 | 220 | 240 | 300 |
| பூசணி | 80 | 150 | 120 | 150 |
| புடோல் | 250 | 260 | 200 | 250 |
| வாழைக்காய் | 200 | 200 | 120 | 200 |
| சின்ன வெங்காயம் | 600 | 600 | 600-900 | 700 |
| பெரிய வெங்காயம் | 150 | 220 | 180-220 | 200 |
| பாகற்காய் | 500 | 450 | 500 | 600 |
| வெண்டிக்காய் | 250 | 300 | 230 | 320 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 100 | 150 |
| பயற்றங்காய் | 400 | 350 | 400 | 400 |
| லீக்ஸ் | 450 | 350 | 360 | 400 |
| பீற்றூட் | 450 | 300 | 400 | 450 |
| கறிமிளகாய் | 800 | 750 | 700 | 800 |
| முருங்கைக்காய் | 1800 | 1600 | 1200 | 1600 |
| போஞ்சி | 300 | 350 | 400 | 450 |
| கத்தரிதம்புள்ள | 200 | 300 | -- | 360 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 100 | 150 |
| தேசிக்காய் | 100 | 80 | 100 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 60-80 | 70-100 |
| இராசவள்ளி | 300 | 350 | 300 | 300 |
| வெங்காயப்பூ | 420 | 400 | 500 | 700 |
| முள்ளங்கி | 60 | 100 | 150 | 120 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 100 | 80 |
| வல்லாரை | 50 | 30 | 40 | 50 |
| ஈரப்பலா | 100 | -- | — | 160 |

# நாட்டிற்கு மீண்டும் கொண்டு வரப்பட்ட இரத்தினக்கல்

(கொழும்பு)

இலங்கையில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட உலகின் மிகப் பெரிய நீல இரத்தின கல் விற்பனை செய்யப்படாமல் மீண்டும் நாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையின் தலைவர் விராஜ் டி சில்வா தெரிவித்துள்ளார்.

2021 ஆம் ஆண்டு இரத்தினபுரி பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்ட 500 கிலோவுக்கும் அதிகமான எடையுள்ள இந்த இரத்தினகல் சுவிட்சர்லாந்திற்கு கொண்டு செல்லப்பட்டதன் பின்னர் அதன் அங்கீகாரத்தைப் பெற்று கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக அவர் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

ஆனால் துரதிஷ்டவசமாக இந்த இரத்தின கல்லை எடுத்துச் சென்ற குழுவினரால் அதனை விற்க முடியாமல் போனதால் கடந்த வாரம் மீண்டும் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டது.

ஒரு நல்ல ஒப்பந்தம் கிடைத்தவுடன் அதனை விற்போம் என்று குழு தெரிவித்துள்ளது. குழுவின் கூற்றுப்படி, அவர்கள் துபாயை தளமாகக் கொண்ட ஒரு நிறுவனத்துடன் பல கலந்துரையாடல்களை மேற்கொண்டனர். இரத்தின கல்லுக்கு 100 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்க குறித்த நிறுவனம் முன்வந்தது.

வணிக மதிப்பை விட நீல இரத்தின கல் அதிக அருங்காட்சியக மதிப்பைக் கொண்டுள்ளது என்று தலைவர் தெரிவித்தார். (நி)

# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2751


கஜனி




தீபிகா




வருண்




தர்சன்




காவிரி




பிரதீஷ்

உறவுகளோடு இருக்கும் போது
இறைவனின் பார்வை உன் மீது இருக்கிறது
என்று மகிழ்ச்சியாக இரு.
தன்னந்தனியாக நிற்கும் போது
இறைவனே உன்னோடு இருக்கிறான்
என்று நம்பிக்கையோடு இரு.

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 80





“இல்லை, இல்லை நான் எதற்காக அங்கே வருகிறேன்?. திரும்பிக் கொள்ளிடத்தைத் தாண்டிக் கடம்பூருக்குத்தான் போகிறேன். இல்லாவிட்டால் எஜமானர் என் கணணைப் பிடுங்கி விடமாட்டாரா?”

“அப்படியானால், உடனே திரும்பு அதோ படகு புறப்படப் போகிறது!”

இடும்பன்காரி திரும்பிப் பார்த்த போது, ஆழ்வார்க்கடியான் கூறியது உண்மை என்று தெரிந்தது; படகு புறப்படும் தருவாயில் இருந்தது.

“சரி, சாமியாரே! நான் போகிறேன்” என்று சொல்லிவிட்டுப் படகுத் துறையை நோக்கி விரைந்து சென்றான் இடும்பன்காரி.

பாதி வழியில் ஒரு தடவை திரும்பிப் பார்த்தான். அதற்குள் ஆழ்வார்க்கடியான் ஒரு விந்தையான காரியம் செய்திருந்தான். மளமளவென்று அந்த அரச மரத்தின் மீது பாய்ந்து ஏறிக் கிளைகள் அடர்ந்திருக்கும் இடத்துக்குப் போய் விட்டான். ஆகையால் இடும்பன்காரியின் கண்ணோட்டத்தில் அவன் விழவில்லை.

இடும்பன்காரி நதியின் பரிசில் துறையை அடைந்தான். படகோட்டிகளில் ஒருவன், “அக்கரைக்கு வருகிறாயா, அப்பா?” என்று கேட்டான்.

“இல்லை, அடுத்த படகில் வரப் போகிறேன் நீ போ!” என்றான் இடும்பன்காரி.

“அடே! இவ்வளவுதானா? நீ வருகிற வேகத்தைப் பார்த்துவிட்டு அல்லவா படகை நிறுத்தினேன்!” என்று சொல்லி ஓடக்காரன் கோல் போட்டு ஓடத்தை நதியில் செலுத்தினான்.

இதற்குள் அரசமரத்தின் நடுமத்தி வரையில் ஏறி நன்றாக மறைந்து உட்கார்ந்து கொண்ட திருமலை, “ஓகோ! நான் நினைத்தது சரியாகப் போயிற்று. இவன் படகில் ஏறவில்லை திரும்பித்தான் வரப்போகிறான். வந்த பிறகு எந்தப் பக்கம் போகிறான் என்று பார்க்க வேண்டும்.

இவனுடைய கைகள் மச்சஹஸ்த முத்திரை காட்டியதை நான் நன்றாகப் பார்த்தேன். அதன் பொருள் என்ன? மீன்! மீன்! மீன் சின்னம் எதைக் குறிக்கிறது? ஆ! மீன் பாண்டியனுடைய கொடியில் பொறித்ததல்லவா? ஒருவேளை, ஆஹாஹா!.. அப்படியும் இருக்குமோ! பார்க்கலாம்! சிறிது பொறுமையுடனே இருந்து பார்க்கலாம்.

பொறுத்தவர் பூமி ஆள்வார், பொங்கியவர் காடாள்வார் ஆனால், இந்தக் காலத்தில் பூமி ஆள்வதைக் காட்டிலும் காடு ஆள்வதே மேலானது என்று தோன்றுகிறது! ஆனாலும் பொறுத்துப் பார்க்கலாம்!..” இவ்விதம் அரசமரத்திலிருந்த அருவமான வேதாளத்தினிடம் திருமலை சொல்லிக் கொண்டிருந்தான்.

விரைவில் அவன் எதிர்பார்த்தபடியே நடந்தது; படகு இடும்பன்காரியை ஏற்றிக் கொள்ளாமலே சென்றது. இடும்பன்காரி நதிக்கரையிலிருந்தபடி அரச மரத்தடியை உற்று உற்றுப் பார்த்தான். பிறகு நாலா திசைகளிலும் துளாவிப் பார்த்தான். ஆழ்வார்க்கடியான் எங்குமில்லையென்பதை நன்கு தெரிந்து கொண்டு திரும்பி அதே அரசமரத்தடிக்கு வந்து சேர்ந்தான்.

இன்னும் ஒரு தடவை சுற்று முற்றும் நன்றாய்ப் பார்த்து விட்டு அந்த மரத்தடியிலேயே உட்கார்ந்து கொண்டான். எதையோ, அல்லது யாரையோ எதிர்பார்ப்பவன் போல் அவனுடைய கண்கள் நாலாபுறமும் சுழன்று நோக்கிக் கொண்டிருந்தன.

ஆனால், மரத்தின் மேலே மட்டும் அவன் அண்ணாந்து பார்க்கவில்லை. பார்த்திருந்தாலும் திருமலை நன்றாகத் தம் திருமேனியை மறைத்துக் கொண்டிருந்தபடியால் மரத்தின் மேல் அவன் உட்கார்ந்திருப்பது இடும்பன்காரிக்குத் தெரிந்திராது.

சுமார் ஒரு நாழிகை நேரம் இவ்விதம் சென்றது. திருமலைக்குக் கால்கள் மரத்துப் போகத் தொடங்கின. இனி வெகுநேரம் மரத்தின் மேல் இருக்க முடியாதென்று தோன்றியது. இடும்பனோ, மரத்தடியிலிருந்து எழுந்திருக்கும் வழியாகத் தோன்றவில்லை.

(தொடரும்...)

# சிறுவர் அரங்கம்

## பரமார்த்த குரு கதைகள்

## பொல்லாக் குதிரை போனதே நல்லது



(நேற்றைய தொடர்ச்சி)

எங்கேயும் நிழலே இல்லையே! ஒரு சீடன் மாட்டின் பக்கம், மாட்டின் நிழல் விழுவதைக் கவனித்து விட்டான். உடனே அவன் மற்றவர்களுக்கு அந்த நிழலைக் காட்டி மகிழ்ந்தான். அவர்களுக்கும் ஒரே மகிழ்ச்சி! அந்த நிழலில் குருநாதரை இளைப்பாற வைக்கலாமே!

மாட்டின் நிழல் விழுந்த பக்கமாக பக்குவமாக தரையிலே ஒரு துண்டை விரித்துப் போட்டார்கள். குருநாதரை இறக்கி அந்தத் துண்டின் மீது அமர்த்தினார்கள். சுற்றிலுமிருந்த அவர்கள் தங்கள் மேல் துண்டுகளினால், அவருக்குக் காற்றை வீசினார்கள்.

குருநாதருக்குச் சற்று ஆறுதலாக இருந்ததே தவிர, களைப்பு முற்றும் குறைந்ததாக இல்லை. என்ன செய்வது...? இன்னும் போக வேண்டிய தூரம் நிறைய இருக்கிறதே! மெதுவாகப் புறப்பட்டார்கள்.

பரமார்த்த குருவை மாட்டின் மீது ஏற்றினார்கள். அந்த மாடும் மோசமாகக் களைப்படைந்திருந்தது. அது நத்தை போல் மெது மெதுவாக ஊர்ந்து சென்றது. எப்படியோ எல்லோரும் இருட்டுவதற்குள் ஒரு சிற்றுரை அடைந்து விட்டார்கள்.

அந்த மாட்டை ஓட்டிச் செல்வதற்கு மாட்டுக் காரனும் அவர்களுடனேயே சென்றிருந்தான். அவனுக்கும் அதிகச் சிரமமாயிருந்தது. எல்லாருமாக அந்தச் சின்ன ஊரிலே ஒரு வீட்டுக்குச் சென்றார்கள். அந் நடையிலே அந்த மாட்டுக்காரனைத் தங்க வைத்தார்கள். அன்றைய வாடகையாக மூன்று பணத்தை மறவாமல் கொடுத்தார்கள்.

அந்தப் பணம் தனக்குப் போதாது என்று முரண்டு பிடித்தான் மாட்டுக்காரன்.

“என்னய்யா, உன்னிடம் பேசிய தொகையைத் தானே கொடுக்கிறோம்? இப்போது மேலும் கேட்கிறாயே. இது நியாயம் இல்லை” என்றார்கள் சிஷ்யர்கள்.

“என்ன பேசினோம்? யோசித்துப் பாருங்கள்!” என்றான் மாட்டுக்காரன்.

“நீ தான் சரியாக நினைத்துப் பார்க்க வேண்டும். மாட்டுக்கு ஒரு நாள் வாடகை மூன்று பணம் தானே பேசினோம்.” “அதை நான் மறுக்கவில்லையே!”

“பிறகு ஏன்... அதிகமாகக் கேட்கிறாய்...?”

“மாட்டின் மேல் குருசுவாமி ஏறி வர மூன்று பணம்தான். ஆனால் வரும் வழியில் வெயிலுக்கு நிழல் தந்து குடை போல் உதவியதே என் மாடு... அதற்குக் கூலி கொடுக்க வேண்டாமா? என்று கூவினான் மாட்டுக்காரன்.

“இது மிகமிக அநியாயம்! அக்கிரமம்!” என்று அவனை விடவும் அதிகமாகக் கூவினார்கள் சீடர்கள். (தொடரும்..)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதன் முதலாக நீங்கள் எதையாவது செய்யுங்கள் பின்னால் வருபவர்கள் அதை இன்னும் அழகாக செய்வார்கள். ~ பாப்லோ பிக்காஸோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழ்ப் பொலிஸாரை நியமிக்கும் கோரிக்கை...

தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டுமாயின், பொலிஸ் அதிகாரமும் காணி அதிகாரமும் எங்களுக்குத் தந்தாக வேண்டும் என்ற விடயத்தைத் தமிழ்த் தரப்புகள் முன்வைக்கத் தவறுவதில்லை.

அவ்வாறான கோரிக்கையை முன்வைப்பதில் நியாயமுண்டு.

தமிழர் தாயகத்தில் தமிழ் மொழி தெரிந்த பொலிஸார் சேவையில் இருக்கும்போது தான், மொழிப்பிரச்சினையின்றி தமிழ் மக்கள் தங்களின் முறைப்பாடுகளைப் பதிவு செய்ய முடியும்.

தவிர, முறைப்பாடுகள் தொடர்பில் இடம்பெறக்கூடிய விளக்கம் விசாரணைகளின் போது, அவற்றை விளங்கிக் கொண்டு செயற்படுவதற்கும் தமிழ்ப் பொலிஸாரின் சேவை தேவையாகவுள்ளது.

இதுதவிர, சிங்களப் பொலிஸாரின் கடந்த காலச் செயற்பாடுகள் தமிழ் மக்களை வெறுப்படையச் செய்துள்ளன.

ஆம், சிங்களம் ~ தமிழ் என்ற இனப்பாகுபாட்டின் அடிப்படையில் சிங்களப் பொலிஸாரின் பணி இருப்பதை பல சந்தர்ப்பங்களில் தமிழ் மக்கள் அனுபவித்துள்ளனர்.

இந்தநிலையில், தமிழ்ப் பிரதேசங்களில் தமிழ்ப் பொலிஸார் கடமையாற்றுவதே பொருத்தம் என்பதும் அவ்வாறு தமிழ்ப் பொலிஸார் கடமையில் ஈடுபடுவதன் பொருட்டு பொலிஸ் அதிகாரத்தை எங்களிடம் தரவேண்டும் என்று கேட்பதும் நியாயத்துவமானது.

எனினும் பொலிஸ் அதிகாரம் தேவை என்று கூறுகின்ற தமிழ்த் தரப்புகள், பொலிஸ் சேவையில் ஈடுபடுவதற்கு நேர்மையான ~ தொழில் தர்மம்மிக்க, தமிழ் இளைஞர்களைத் தெரிவு செய்து, அவர்களுக்குத் தேவையான வழிப்படுத்தல்கள் வழங்கப்பட்டனவா? என்றால் இல்லை என்பதே அதற்கான பதில்.

இந்நிலையில், பொலிஸ் சேவையில் இணைக்கப்பட்ட தமிழ்ப் பொலிஸாரில் கணிசமானவர்களின் சேவை தொடர்பில் அதிருப்தியான விமர்சனங்களே முன்வைக்கப்படுகின்றன.

ஆம் இலஞ்சம், பாலியல் சேட்டைகள், அடாவடித்தனங்கள், கடமையை மதிக்காத தன்மை எனப் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் அவர்கள் மீது சுமத்தப்படுவதைக் காண முடிகிறது.

ஒரு காலத்தில் இலங்கை பொலிஸ் சேவையில் இருந்த தமிழ்ப் பொலிஸார் மீது இந்த நாடு மிகுந்த மரியாதை கொண்டிருந்தது.

சட்டம் ஒழுங்கைப் பின்பற்றுவது, கடமையைப் போற்றுவது, பக்கச்சார்பின்றி நேர்மையாகப் பணியாற்றுவது என்ற நற்சான்றிதழ்களை நம் மூத்த தமிழ்ப் பொலிஸார் தமது சேவையில் பதிவு செய்திருந்தனர்.

ஆனால் இப்போது பொலிஸ் சேவையில் இருக்கக்கூடிய தமிழ்ப் பொலிஸாரில் ஒரு தரப்பினர் மீது (சேவையைச் சிறப்பாகச் செய்கின்ற தமிழ்ப் பொலிஸாரும் உளர்) பொதுமக்களும் பொலிஸ் நிர்வாகமும் முன்வைக்கின்ற குற்றச்சாட்டுக்களைப் பார்க்கும்போது, சிங்களப் பொலிஸார் பரவாயில்லையோ என்று நினைக்குமளவுக்கு நிலைமை ஆயிற்று.

ஆக, பொலிஸ் அதிகாரம் கேட்கின்ற தமிழ்த் தரப்புகள் அதில் யாரை ஈடுபடுத்துவது என்ற தெரிவுகளையும் செய்ய வேண்டும்.

இல்லையேல் பொலிஸ் அதிகாரத்தைக் கேட்டு எங்கள் தலையில் நாங்களே மண்ணைக் கொட்டிக் கொண்டோம் என்பதாக நிலைமையாகிவிடும் கவனம்.

# இலங்கையின் அனைத்து பிரச்சினையையும் ஐ.எம்.எப். நிதியால் தீர்க்க முடியாது

## வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தின் நிதியுதவிக் கிடைத்தால் கூட, இலங்கையின் அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்த்துவிட முடியாது என வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்ற புதன்கிழமை இடம்பெற்ற சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது உரையாற்றிய அவர், "இலங்கையின் கடன் மறுசீரமைப்புக்கு இந்தியா சாதகமான பதிலை வழங்கியுள்ளது.

அந்நாடு நேரடியாக ஐ.எம்எப்இற்கு இதனை அறிவித்துள்ளதாக த ஹிந்து பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சீனாவும் எமக்கு சாதகமான பதிலை வழங்கும் என்று நம்புகிறோம்.

எனவே, சிறந்த பெறுபேறு ஊடாக ஐ.எம்.எப். உடன் எம்மால் பேச்சு நடத்த முடியும்.

எனினும், ஐ.எம்.எப். வழங்கும் 2.9 பில்லியன் டொலர் நிதியால் அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்க்க முடியாது.

ஆனால், நீண்ட காலமாக தீர்க்கமுடியாத பல தேவைகளை மற்றும் அத்தியாவசியத் தேவைகளை இதனால் நிறைவேற்ற முடியும் என நாம் நம்புகிறோம்.

நாம் படிப்படியாகத் தான் பிரச்சினைகளிலிருந்து வெளியே வர முடியும். குறுகிய கால பிரசித்தமான தீர்மானங்களை எடுத்து, இந்த நாட்டை மேலும் மேலும் சிக்கலுக்குள் தள்ளுவதல்ல எமது முயற்சி.

மாறாக நடைமுறைச் சாத்தியமான விடயங்களைத்தான் நாம் மேற்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். (ம-7)

## கோட்டாவிற்கு சலுகைகள் ஹிருணிகா அதிருப்தி

(கொழும்பு)

மக்களின் ஜனநாயக உரிமைகளை அரசாங்கம் தடுக்க முற்படுமாக இருந்தால், மீண்டும் மக்கள் எழுச்சிப் போராட்டங்கள் நாட்டில் ஆரம்பமாகும் என ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினரான ஹிருணிகா பிரேமசந்திரன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்ட அவர் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு ஜனாதிபதி செயலகத்தினால் மாதாந்தம் 9.5 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று அவருக்கு 15 முதல் 20 வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன. மக்களால் விரட்டியடிக்கப்பட்ட ஒரு ஜனாதிபதிக்கு, இவ்வாறான செலவுகளை ஏன் செய்ய வேண்டும் எனும் கேள்வி எழுகிறது.

தற்போதைய ஜனாதிபதிதான் முன்னாள் ஜனாதிபதி கோட்டாவுக்காக பல சலுகைகளை வழங்கியுள்ளார். இதற்கு அமைச்சரவையும் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நாட்டு மக்களுக்கு போதுமான உணவு இல்லாத இந்த நேரத்தில், மின்சாரக் கட்டணம் 400 வீதத்தால் உயர்வடைந்துள்ள இந்த நேரத்தில், மத்திய தர வர்க்கத்தினர் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள இந்த நேரத்தில், இவ்வாறான அநாவசிய செலவுகளை அரசாங்கம் செய்து வருகிறது.

நாட்டை இந்த அழிவு நிலைமைக்குக் கொண்டு வந்த ஜனாதிபதியின் மாதாந்த செலவிற்காக 9.5 இலட்சம் ஒதுக்கப் பட்டுள்ளமை மிகவும் கவலைக்குரிய விடயமாகும் என்றார். (ம-7)

## பளையில் 3 வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று விபத்து

## தம்பதிகள் படுகாயம்

(கரணவாய்)

மூன்று வாகனங்கள் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானதில் வயோதிப தம்பதிகள் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பளை, முல்லையடியில் நேற்று புதன்கிழமை பிற்பகல் 3:30 மணியளவில் இவ் விபத்து இடம் பெற்றுள்ளது.

இச் சம்பவத்தில் சந்தையடி, கண்டாவளையைச் சேர்ந்த தம்பதிகளே படுகாயமடைந்தவர்களாவர்.

யாழ்ப்பாண பகுதியில் இருந்து கிளிநொச்சிநோக்கி சென்ற மோட்டார் சைக்கிளில் இரு வயோதி தம்பதியினர் பயணித்துள்ளனர். மோட்டார் சைக்கிளின் பின்னால் பயணித்த ஹப் ரக வாகனம் முந்திச் செல்ல முற்பட்ட போது இவ் விபத்து இடம் பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த வயோதிபத் தம்பதியினர் தூக்கி வீசப்பட்ட நிலையில், மோட்டார் சைக்கிள் சுமார் 75மீற்றர் வரை முன்னோக்கிபாய்ந்து சென்று கிளிநொச்சி பகுயில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த கப்ரக வாகத்துடன் குறித்த மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானது.

இதனால் மோட்டார் சைக்கிளும், கப் வாகனமும் பாரியளவில் சேதங்களுக்குள்ளானது.

இவ் விபத்துத் தொடர்பில் பளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-7,60)

## தேயிலை ஏற்றுமதியால் 411 பில்லியன் வருமானம்

(கொழும்பு)

தேயிலை ஏற்றுமதி மூலம் கடந்த வருடம் 411 பில்லியன் ரூபாய் வருமானமாக ஈட்டப்பட்டுள்ளது.

தேயிலை சபை விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி 250 மில்லியன் கிலோ தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாக அந்த சபை தெரிவித்துள்ளது. (ம-7)

## கொழும்பில் துப்பாக்கிச்சூடு ஒருவர் படுகாயம்

கொட்டாஞ்சேனை 6 ஆவது ஒழுங்கை பகுதியில் நேற்று பிற்பகல் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

குறித்த நபர் மகிழுந்தில் பயணித்தபோது, ஊந்துருளியில் பிரவேசித்த இருவர் துப்பாக்கிப் பிரயோகம் நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூட்டில் அவரது வாய் பகுதியிலும், வயிற்றிலும் பலத்த காயம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். (ம-7)

## 75 ஆவது சுதந்திரதின விழாவில் கலந்து கொள்ள

### 400 வெளிநாட்டு பிரமுகர்களுக்கு அழைப்பு

(கொழும்பு)

பொதுநலவாய அமைப்பின் செயலாளர் நாயகம் உட்பட 400 வெளிநாட்டு பிரமுகர்களுக்கு 75 ஆவது சுதந்திரதின விழாவில் கலந்துகொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த நேற்று தெரிவித்துள்ளார்.

நெருக்கடியான சூழ்நிலை இருந்தபோதிலும், திட்டமிடப்பட்ட சுதந்திரதின கொண்டாட்டம் சுற்றுலாவை மேம்படுத்தும் நிகழ்வாக இருக்கும் என்பதால், அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை நெருக்கடியான சூழ்நிலைக்கு மத்தியில் அரசாங்கம் கொண்டாட்டங்களை முன்னெடுக்கிறதா என பாராளுமன்ற உறுப்பினர் வண.அத்துரலியே ரத்தன தேரர் கேள்வி எழுப்பியுள்ளார்.

மக்கள் சிரமப்படும்போது கொண்டாட்டங்களுக்காக அரசாங்கம் பெருமளவிலான பணத்தைச் செலவு செய்யக் கூடாது எனவும் தெரிவித்த தேரர், குறைந்த செலவில் அதனை அடையாளமாக நடத்துமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

எவ்வாறாயினும் சுற்றுலாத்துறை அபிவிருத்தியடைந்து வரும் நேரத்தில் சுற்றுலாவை மேம்படுத்த பாரம்பரிய நிகழ்வுகளுடன் கொண்டாட்டத்தை நடத்துவது முக்கியம் என இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் கொஞ்சம் பணம் செலவழிக்க வேண்டும் என்பது உண்மை தான் என்றும் இந்த நிகழ்வுக்கு தனியார் அனுசரணையாளர்களும் அனுசரணை வழங்கியுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தை மாத இராசி பலன்கள் 15.01.2023-12.02.2023

## மிதுனம்

**ஆளுமைத் திறனும் அனுசரித்துப் போகும் குணமும் கொண்ட மிதுன இராசி வாசகர்களே!**

தைமாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் புதன் சப்தம ஸ்தானத்தில் இருக்கிறார். அஷ்டமத்தில் சனியோடு சூரியனும் சுக்கிரனும் இணைந்திருக்கிறார்கள். எனவே உழைப்பிற்கேற்ற பலன் கிடைப்பது அரிது. ஊர்மாற்றம், இடமாற்றங்கள் வரலாம். செலவுகள் அதிகரிக்கும். செவ்வாய் 12 இல் இருப்பதால் கட்டடப் பணியில் ஆர்வம் காட்டுவீர்கள். மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் புதன் சப்தம ஸ்தானத்தில் இருக்கிறார். பஞ்சம ஸ்தானத்தில் கேதுவும், இலாப ஸ்தானத்தில் ராகுவும் வீற்றிருக்கிறார்கள். மகரத்தில் சூரியன், சனி, சுக்கிரன், மீனத்தில் குருவும் ரிஷபத்தில் செவ்வாயும் சஞ்சரிக்கிறார்கள். இதன் விளைவாக பிள்ளைகள் வழியில் செலவு அதிகரிக்கலாம். தொழிலில் கணக்கு வழக்குகளை கச்சிதமாக வைத்துக்கொள்வது நல்லது. பரிசீலனையில் இருந்த பதவி மாற்றம் திடீரென வரலாம். அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கத்தால் உறவினர்களுக்குள் திருப்தியான உறவு ஏற்படாது. பணிபுரியும் இடத்தில் சக ஊழியர்களால் பிரச்சினைகள் வந்து கொண்டேயிருக்கும். சேமிப்புகள் கொஞ்சம் கரையலாம். தொழிலில் ஒருசில ஒப்பந்தங்கள் கைநழுவிச் செல்லும். பூமி விற்பனையில் தடைகள் அதிகரிக்கும். குறுக்கீடு சக்திகளை மாற்ற வழிபாடுகளை முறையாகச் செய்வது நல்லது.

**சூரியன் - சனி சேர்க்கை**

மாதத் தொடக்கத்தில் இருந்து மாதம் முழுவதுமே சூரியன் மற்றும் சனி சேர்க்கை ஏற்படுகிறது. பகைக் கிரகங்களின் சேர்க்கை அவ்வளவு நல்லதல்ல. உங்கள் இராசிக்கு 3 ஆம் இடத்திற்கு அதிபதியானவர் சூரியன். சகாய ஸ்தானாதிபதி சூரியன், அஷ்டமத்துச் சனியோடு இணைந்து சஞ்சரிக்கும் பொழுது சில நல்ல வாய்ப்புகள் கைந ழுவிச் சென்றுவிடும். சனி விலகும் வரை பொறுமையாக இருப்பது நல்லது. வழக்கமான செயல்களில் மந்த நிலை உருவாகும். உங்களுக்கோ, உங்கள் குடும்பத்தைச் சார்ந்தவர்களு க்கோ அடிக்கடி ஆரோக்கியத் தொல்லைகள் ஏற்படும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். உடன் பிறப்புகளால் ஒரு சில பிரச்சினைகள் வந்து அலைமோதும். பணிபுரியும் இடத் தில் உத்தியோக உயர்வின் காரணமாக குடும்பத்தை விட்டுப் பிரிந்து சென்று வெளியூரில் பணிபுரியும் வாய்ப்பு ஒரு சிலருக்கு வாய்க்கலாம். அலுவலகத் தகவல்களை யாரிடமும் பகிர்ந்துகொள்ள வேண்டாம்.

**கும்ப - சுக்கிரன் சஞ்சாரம்**

உங்கள் இராசிக்கு 5, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன், தை 9 ஆம்திகதி கும்ப இராசிக்குச் செல்கிறார். பாக்கிய ஸ்தானத்தில் சுக்கிரன் சஞ்சரிக்கும் பொழுது நினைத்தது நிறைவேறும். நிகழ் காலத் தேவைகள் பூர்த்தியாகும். அனைத்து நண்பர்களின் ஆதரவும் கிடைக்கும். தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். எதிர்பார்த்த இலாபம் உண்டு. பால்ய நண்பர்களின் மூலம் புதிய ஒப்பந்தங்கள் வரலாம். பெண் பிள்ளைகளின் சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகலாம். பணிபுரியும் இடத்தில் சம்பள உயர்வு கிடைத்து சந்தோசமடைவீர்கள்.

**மகர - புதன் சஞ்சாரம்**

தை 21 ஆம் திகதி மகர இராசிக்கு புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு அஷ்டமத்தில் புதன் சஞ்சரிக்கும் பொழுது மறைந்த புதனால் நிறைந்த தனஇலாபம் கிடைக்கும். இடமாற்றம், உத்தியோக மாற்றம் இனிமை தரும் விதம் அமையும். உங்கள் திறமையை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பங்கள் கைகூடிவரும். சமூகத்தில் மேல் தட்டு மக்களின் நட்பால் படிப்படியாக பல காரியங்களை சாதித்துக்கொள்வீர்கள். "புத ஆதித்ய யோகம" இருப்பதால் புதிய பொறுப்புகளும், "பதவிகளும் கூட கிடைக்கலாம். உத்தியோகத்தில் தற்காலிகமான பணி, நிரந்தரப் பணியாக மாறும் சூழ் நிலை உண்டு. இம்மாதம் பெருமாள் - லட்சுமி வழிபாடு பெருமை சேர்க்கும்.

## கடகம்

**மற்றவர்களின் எண்ணங்களை புரிந்து கொண்டு செயலாற்றும் கடக இராசி வாசகர்களே!**

இம்மாதம் உங்கள் இராசிநாதன் சந்திரனோடு கேது இணைந்து சஞ்சரிக்கிறார். எனவே மனக்குழப்பம் அதிகரிக்கும். கண்டகச் சனியின் ஆதிக்கம் இருப்பதால் மருத்துவச் செலவு உண்டு. 9 ஆம் இடத்தில் இருக்கும் குருவின் பார்வை, உங்கள் இராசியில் பதிவதால் குரு வழிபாட்டால் காரியங்கள் கடைசி நேரத்தில் கைகூடலாம். மாதத்தொடக்கத்தில் உங்கள் இராசிக்கு 4 ஆம் இடத்தில் கேதுவும், தொழில் ஸ்தானத்தில் ராகுவும் சஞ்சரிக்கிறார்கள். தனுசில் புதனும், மகரத்தில் சூரியன், சனி, சுக்கிரனும், ரிஷபத்தில் செவ்வாயும் சஞ்சரிக்கிறார்கள். பாக்கிய ஸ்தானத்தில் குரு சஞ்சரித்து உங்கள் இராசியைப் பார்க்கிறார். எனவே. உழைப்பிற்கேற்ற பலன் கிடைப்பது அரிது. ஊர் மாற்றம், இடமாற்றம், உத்தியோக மாற்றம் எதிர்பாராத விதத்தில் வரலாம். சுக ஸ்தானத்தில் கேது சஞ்சரிப்பதால் மருத்துவச் செலவு உண்டு. தன்னிச்சையாக செயற்படுவீர்கள். சில சிக்கல்களைச் சந்திக்க நேரிடும். ஒரு கடனை அடைக்க மற்றொரு கடனை வாங்கும் சூழல் உருவாகும். பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு திடீரெனப் பொறுப்புகள் மாற்றப்படும். தொழில் பங்குதாரர்கள் விலகினாலும் புதியவர்கள் வந்திணைவர்.

**சூரியன் - சனி சேர்க்கை**

உங்கள் இராசிக்கு 2 ஆம் இடமான தன ஸ்தானத்திற்கு அதிபதியானவர் சூரியன். அவர் கண்டகச் சனியோடு இணைந்து சஞ்சரிக்கும் பொழுது, அளவிற்கு அதிகமான விரயங்கள் ஏற்படலாம். உறவினர்களாலும், நண்பர்களாலும் தொழிலாலும் தொல்லைகள் ஏற்படும். திடீர் விரயங்களை சமாளிக்க முடியாமல் தடுமாற்றம் அடைவீர்கள். கடன் சுமை பெருகிக் கொண்டே போகும். குடும்பத்தில் பழைய பிரச்சினை மீண்டும் தலை தூக்கும். உற்றார், உறவினர் களின் பகை அதிகரிக்கும். பணிபுரியும் இடத்தில் உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்காது. உத்தியோக உயர்வு மட்டுமல்லாமல் சம்பள உயர்வும் தாமதமாகலாம். நெருக்கமாக இருந்த மேலதிகாரிகள் கூட உங்களை விட்டு விலக நேரிடலாம். பிள்ளைகளால் சில பிரச்சினைகள் வந்துசேரும். உறவினர்களுக்கு நன்மை செய்தால் கூட, அவர்களுக்கு அது தீமையாகத் தெரியும். கவனம் தேவை. பொதுவாழ்வில் இருப்ப வர்கள் வீண் பழிகளுக்கு ஆளாகாமல் பார்த்துக் கொள்வது நல்லது.

**கும்ப - சுக்கிரன் சஞ்சாரம்**

உங்கள் இராசிக்கு 4, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன், தை 9 ஆம் திகதி கும்ப இராசிக்குச் செல்கிறார். அவர் அஷ்டமத்தில் சஞ்சரிப்பது நன்மைதான். அசுர குரு மறைவிடத்தில் சஞ்சரிக்கும் போது எண்ணங்கள் ஒவ்வொன்றாக நிறைவேறும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. அதிகார வர்க்கத்தினரின் ஆதரவோடு புதிய பொறுப்புகள் வந்துசேரும். பணிபுரியும் இடத்தில் மேலதிகாரிகளின் ஆதரவு கூடுதலாகக் கிடைக்கும். உத்தியோகத்தில் உள்ள நுணுக்கங்களை கற்றுக்கொள்வீர்கள். உங்கள் உழைப்பிற்கேற்ற ஊதியம் கிடைக்கும்.

**மகர - புதன் சஞ்சாரம்**

உங்கள் இராசிக்கு 3, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன், தை 21 ஆம் திகதி மகர இராசிக்குச் செல்கிறார். சப்தம ஸ்தானத்திற்கு புதன் வரும்பொழுது, "புத சுக்கிர யோகம்" செயற்படும். இதனால் பொருளாதார நிலை உயரும். செலவிற்கேற்ற வரவு வந்து கொண்டே இருக்கும். பயணங்கள் அதிகரிக்கும். தொழிலில் புதிய ஒப்பந்தங்கள் வந்துசேரும். பழைய வாகனங்களைக் கொடுத்துவிட்டுப் புதிய வாகனங்களை வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். இம்மாதம் சிவன் - உமையவள் வழிபாடு சிறப்புகளை வழங்கும்.

## சிம்மம்

**எவரையும் எளிதில் வசமாக்கிக் கொள்ளும் ஆற்றல் பெற்ற சிம்ம இராசி வாசகர்களே!**

தை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் சூரியன் சுக்கிரனோடும், சனியோடும் இணைந்து 6 ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார். குரு பார்வையால் வரவு திருப்தி தரும். வரன்கள் வாசல் தேடி வரும். இதுவரை ஸ்தம்பித்து நின்ற தொழில் வெற்றிநடை போடும். யோக காரகன் செவ்வாயும் பலம் பெற்று இருப்பதால் தைரியமும், தன்னம்பிக்கையும் கூடும். புதிய ஒப்பந்தங்கள் வந்துசேரும். மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சூரியன், 3,10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரனோடும் சனியோடும் இணைந்து மகரத்தில் சஞ்சரிக்கிறார். மீனத்தில் குருவும், தனுசில் புதனும் ரிஷபத்தில் செவ்வாயும் வீற்றிருக்கிறார்கள். சகாய ஸ்தானத்தில் இருக்கும் கேது, சந்திரனோடு இணைந்திருக்கிறார். பாக்கிய ஸ்தானத்தில் ராகு சஞ்சரிக்கிறார். இதன் விளைவாக இடம், பூமி விற்பனையால் இலாபம் உண்டு. சுபச்செலவுகள் அதிகரிக்கும். 3 இல் கேது இருப்பதால் சகோதர வழியில் சில பிரச்சினைகளைச் சந்திக்க நேரிடும். பாகப்பிரிவினைகள் இழுபறி நிலையில் இருக்கும். வாங்கிய சொத்துக்களில் ஒரு பகுதியை விற்றுவிட்டு அதில் வரும் மூலதனத்தைக் கொண்டு தொழிலை விரிவுபடுத்தும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். வெளியில் கொடுத்த கடன்கள் படிப்படியாக வசூலாகும். ஸ்தம்பித்து நின்ற தொழில் வெற்றிநடை போட எடுத்த முயற்சி கைகூடும். பொருளாதார வளர்ச்சிக்கு அடித்தளம் அமையும் நேரம் இது.

**சூரியன் - சனி சேர்க்கை**

உங்கள் இராசிக்கு அதிபதியான சூரியன் 6 ஆம் இடத்தில் எதிரிகள் ஸ்தானத்தில் சனியோடு இணைந்து சஞ்சரிக்கிறார். பகைக் கிரகங்களின் சேர்க்கை அவ்வளவு நல்ல தல்ல. என்றாலும் சகாய ஸ்தானாதிபதி சுக்கிரனும், சனியோடு இணைந்திருப்பதால் பெரியளவில் பாதிப்பு இருக்காது. சில தடைகளும், தடுமாற்றங்களும் வந்தாலும் அதைச் சமாளித்து விடுவீர்கள். ஒரு சிலருக்கு பொறுப்புகள் மாறலாம். எதிர்பார்த்த பொறுப்புகள் கிடைப்பது அரிது. பணிபுரியும் இடத்தில் வேலைப்பளு கூடும். உங்கள் திறமையைக் கண்டு மேலதிகாரிகள் வியப்பார்கள். எந்த இடையூறு வந்தாலும் அதைப் பொருட்படுத்தாமல் கண்ணும், கருத்துமாக இருப்பது கண்டு பாராட்டுவர். இடமாற்றம், இலாகா மாற்றம் எதிர்பார்த்தபடி கிடைக்கும். உயர்மட்ட அதிகாரிகளின் பழக்கத்தால் கேட்ட சலுகைகளைப் பெறுவீர்கள்.

**கும்ப - சுக்கிரன் சஞ்சாரம்**

உங்கள் இராசிக்கு 3, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன், தை மாதம் 9 ஆம் திகதி கும்ப இராசிக்குச் செல்கிறார். சப்தம ஸ்தானத்திற்கு சுக்கிரன் வரும்பொழுது மிகுந்த நன்மைகள் உங்களுக்கு கிடைக்கும். குறிப்பாக படித்து முடித்து வேலையில்லாமல் இருக்கும் வாழ்க்கைத் துணைக்கு, வேலை கிடைத்து மகிழ்ச்சியடைவீர்கள். வெளிநாட்டு வணிகத்தால் ஆதாயம் உண்டு. பொருளாதாரநிலை உயரும். பணிபுரியும் இடத்தில் மேலதிகாரிகள் உங்கள் முன்னேற்றத்திற்கு வழிவகுத்துக் கொடுப்பர். இல்லத்தில் நல்ல சம்பவங்கள் நடைபெறும்.

**மகர - புதன் சஞ்சாரம்**

உங்கள் இராசிக்கு 2, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன், தை 21 ஆம் திகதி மகர இராசிக்குச் செல்கிறார். மகரத்தில் புதன் சஞ்சரிக்கும் பொழுது, தனவரவில் இருந்த தடைகள் அகலும். தக்க சமயத்தில் நண்பர்களின் உதவி கிடைக்கும். இந்த காலகட்டத்தில் "புத ஆதித்ய யோகம்" இருப்பதால் கல்விக்காக எடுத்த முயற்சி கைகூடும். அடகு வைத்த நகைகளை மீட்டுக் கொண்டு வரும் வாய்ப்பு உண்டு. கலைஞர்களுக்கு நல்ல நிறுவனங்களில் இருந்து அழைப்புகள் வரலாம். இம்மாதம் தென்முகக் கடவுளை இன்முகத்தோடு வழிபட்டால் நன்மைகள் கிடைக்கும்.

## கன்னி

**பிறரின் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்கும் கன்னி இராசி வாசகர்களே!**

தைமாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் புதன் சுகஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். குருவின் பார்வையும் உங்கள் இராசியில் பதிவதால் ஆரோக்கியம் சீராகும். புதிய முயற்சிகளில் வெற்றி கிட்டும். மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் புதன் 4 ஆம் இடத்தில் அமர்ந்து 10 ஆம் இடத்தைப் பார்க்கிறார். எனவே தொழில் முன்னேற்றம் ஏற்படும். தொல்லை தந்த எதிரிகள் விலகுவர். நிலையான வருமானத்திற்கு வழியமைத்துக் கொள்வீர்கள். நீடித்த நோய் அகலும். பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் சூரியன், சனி, சுக்கிரன் மூவரும் இணைந்திருக்கின்றனர். சப்தம ஸ்தானத்தில் குருவும் ரிஷபத்தில் செவ்வாயும் இருக்கிறார்கள். 2 இல் கேது, 8 இல் ராகு இருந்து சர்ப்ப தோஷத்தை உருவாக்கினாலும், குரு பார்வை உங்கள் இராசியில் பதிவதால் பாதிப்புகள் ஏற்படாது. கேதுவோடு, மனது காரகன் சந்திரனும் இருப்பதால் இடையிடையே மனக்குழப்பம் அதிகரிக்கும். ஆன்மிகப் பெரியவர்களின் ஆலோசனைகளும், அனுபவஸ்தர்களின் அறிவுரையும் உங்கள் வாழ்க்கைப் பாதையை சீராக்கிக் கொடுக்கும்.

**சூரியன் - சனி சேர்க்கை**

உங்கள் இராசிக்கு 12 இற்கு அதிபதியானவர் சூரியன். 5, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி பகவான். 6, 12 ஆகிய இடங்களின் அதிபதிகள் இணைந்திருப்பது "விபரீத இராஜயோக"மாகும். எனவே திட்டமிடாத காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும். திடீர், திடீரென நல்ல தகவல் வரும். ரொக்கத்தால் வந்த சிக்கல்கள் அகலும். நோய் நொடியில் இருந்து நிவாரணம் பெறுவீர்கள். தொழில் வளர்ச்சி திருப்தி தரும். தொலைதூரத்தில் இருந்து நல்ல தகவல் வரலாம். வருமானப் பற்றாக்குறை அகன்று வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்துவைப்பீர்கள். 5 இற்கு அதிபதியாகவும் சனி விளங்குவதால் பிள்ளைகளின் முன்னேற்றம் கண்டு பெருமைப்படுவீர்கள். பட்ட மேற் படிப்பிற்காக அவர்கள் வெளிநாடு செல்ல நினைத்தால் அதற்காக எடுக்கும் முயற்சி கைகூடும். பூர்வீக சொத்துக்களால் ஆதாயம் உண்டு. எப்பொழுதோ வாங்கிப் போட்ட சொத்துக்கள் பலமடங்கு விலை உயர்ந்து மகிழ்ச்சி தரும். உறவினர்களின் ஒத்துழைப்பால் நல்ல முன்னேற்றம் காண்பீர்கள்.

**கும்ப - சுக்கிரன் சஞ்சாரம்**

உங்கள் இராசிக்கு 2, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன், தை 9 ஆம் திகதி கும்ப இராசிக்குச் செல்கிறார். அவர் 6 ஆம் இடத்திற்கு வரும் பொழுது கொடுக்கல் - வாங்கல்கள் சரளமாக இருக்கும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. சங்கிலித் தொடர்போல வந்த கடன்சுமை பாதிக்கு மேல் குறையும். எனவே நிம்மதி பெருமூச்சுவிடுவீர்கள். பெற்றோரின் ஆதரவு கிடைக்கும். தொழிலில் பழைய பங்குதாரர்களை விலக்கிவிட்டு, நீங்களே நடத்த முன்வருவீர்கள். உத்தியோகத்தில் தலைமையின் ஆதரவோடு முன்னேற்றம் காண்பீர்கள்.

**மகர - புதன் சஞ்சாரம்**

உங்கள் இராசிநாதன் புதன், தை 21 ஆம் திகதி மகர இராசிக்குச் செல்கிறார். பூர்வ புண்ணிய ஸ்தானத்திற்கு செல்லும் புதனால் நல்ல நேரம் தொடங்குகிறது. வருமானம் உயரும். வாழ்க்கைப் பாதை சீராகும். வீடு, இடம் வாங்கும் யோகம் உண்டு. உத்தியோகத்தில் விரும்பிய இடத்திற்கு மாறுதல் கிடைக்கும். சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டு. தொழில் ஸ்தானாதிபதியாகவும் புதன் விளங்குவதால் புதிய ஒப்பந்தங்கள் வந்துசேரும். மாமன், மைத்துனர் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும். இல்லத்தில் மங்கல நிகழ்ச்சிகள் நடைபெறும். பூர்வீக சொத்துக்களால் ஆதாயம் உண்டு. இம்மாதம் வராஹி வழிபாடு வளர்ச்சியை அதிகரிக்கச் செய்யும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேங்காய்...

இச்சம்பவம் நேற்று முன்தினம் அராலி மத்தியில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருகையில்,

சாரதியாக பணிபுரியும் குறித்த நபர் கடந்த 16ம் திகதி வாகனத்தை நிறுத்தி விட்டு தென்னை மரத்தின் கீழ் படுத் திருந்து ஓய்வெடுத்துக் கொண்டிருந் தார்.

இதன்போது அவரது நெஞ்சுப்பகுதி மீது தேங்காய் விழுந்தது. அதனை யடுத்து அவர் நேற்று முன்தினம் வைத் தியசாலைக்கு அழைத்துச் செல்லப் பட்டுக்கொண்டிருந்தவேளை இடை யில் உயிரிழந்துள்ளார்.

இதில் அராலி மத்தியைச் சேர்ந்த சிவானந்தன் கஜாணன் (வயது-39) என்ற நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் பிரேத பரிசோத னைகளின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (ம-7,104)

## முதல்வர் வேட்...

வீதியில் அமைந்துள்ள இலங்கை தமி ழரசுக் கட்சியின் தலைமை செயலகத் தில் கட்சித் தலைவர் மாவை சேனாதி ராஜா தலைமையில் நேற்று இடம் பெற்ற கலந்துரையாடலிலேயே மேற் படி தீர்மானம் எடுக்கப்பட்டது.

யாழ்.மாநகர முதல்வரை தெரிவு செய்வதற்கான தெரிவு இன்று வட மாகாண உள்ளூராட்சி ஆணை யாளர் செ.பிரணவநாதன் தலைமை யில் இடம்பெறவுள்ளது.

இதன்போது இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பாக யாரை நிறுத்துவது என் பது தொடர்பாக நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டம் இணக்கமின்றி முடிவுக்கு வந்தநிலையில் நேற்றுக் காலை 9 மணிக்கு மீண்டும் கூட்டத் தைக் கூட்டி முதல்வர் தொடர்பாக தீர் மானம் எடுக்கப்பட்டது.

யாழ்.மாநகர முதல்வர் வேட்பாளரை தெரிவு செய்வதில் தமிழரசுக் கட்சிக்குள் வேறுபட்ட கருத்துக்கள் முன்வைக்கப் பட்டதுடன் சொலமன் சிறில், இம் மானுவேல் ஆனல்ட் ஆகியோரின் பெயர்கள் முதல்வர் தெரிவுக்கு முன் வைக்கப்பட்ட நிலையில் இம்மானு வேல் ஆனல்டை முதல்வர் தெரிவுக்கு நிறுத்தத் தீர்மானிக்கப்பட்டது. (ம-7,33)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 18/01/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1459
வெற்றி இலக்கங்கள்
கும்பம் 4 9 1 8 3 2
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.01.18
சீட்டிழுப்பு இலக்கம் - 1034
H 15 18 51 58
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
NATIONAL LOTTERIES BOARD

கொவிசெத
திகதி 2023.01.18
சீட்டிழுப்பு இலக்கம் 3246
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
R 01 10 47 66
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 18/01/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1352
வெற்றி எழுத்து சுப்பர் இலக்க வெற்றி இலக்கங்கள்
C 06 23 31 38 75

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.01.18
சீட்டிழுப்பு இலக்கம் 313
மகரம் 01 05 23 35 மகரம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/01/18
சீட்டிழுப்பு இலக்கம் 5004
0 6 3 8 5 1 3
தேசிய லொத்தர் சபை


## 12 அத்தியாவசிய...

180 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

வெள்ளை சீனி 1 கிலோ 02 ரூபா யால் குறைக்கப்பட்டு புதிய விலை 216 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

சிவப்பு பச்சை அரிசி 1 கிலோ 08 ரூபாயால் குறைக்கப்பட்டு புதிய விலை 187 ரூபாயாக நிர்ணயிக்கப்பட் டுள்ளது.

வெள்ளை பச்சை அரிசி (உள்நாடு) 1 கிலோ 10 ரூபாயால் குறைக்கப் பட்டு புதிய விலை 179 ரூபாயாக நிர்ணயிக் கப்பட்டுள்ளது.

சம்பா (உள்நாடு) 1 கிலோ 10 ரூபா யால் குறைக்கப்பட்டு புதிய விலை 210 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

வெள்ளை நாடு அரிசி (உள்நாடு) 1 கிலோ 09 ரூபாயால் குறைக்கப்பட்டு புதிய விலை 189 ரூபாயாக நிர்ணயிக் கப்பட்டுள்ளது.

வெள்ளை நாடு அரிசி (இறக்குமதி) 1 கிலோ 08 ரூபாயால் குறைக்கப்பட்டு புதிய விலை 180 ரூபாயாக நிர்ணயிக் கப்பட்டுள்ளது.

கீரி சம்பா 1 கிலோ 06 ரூபாயால் குறைக்கப்பட்டு புதிய விலை 239 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

சிவப்பு பருப்பு 1 கிலோ 07 ரூபா யால் குறைக்கப்பட்டு புதிய விலை 370 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

காய்ந்த மிளகாய் 1 கிலோ 50 ரூபா யால் குறைக்கப்பட்டு புதிய விலை 1730 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கோதுமை மா 1 கிலோ 05 ரூபாயால் குறைக்கப்பட்டு புதிய விலை 235 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

நெத்தலி 1 கிலோ 20 ரூபாயால் குறைக்கப்பட்டு புதிய விலை 1100 ரூபா யாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## வேலன் சுவாமி...

வர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம் பெற்ற எதிர்ப்பு போராட்டத்தின்போது, பொலிஸார் தடுப்புக்களை ஏற்படுத்தி இருந்தனர். அதன்போது, பொலிஸா ரின் தடுப்புக்களை தாண்டி செல்ல முற்பட்டனர்.

அதன்போது, பொலிஸார் தண்ணீர் தாரை பிரயோகம்மேற்கொண்டனர். அவ் வேளை பொலிஸாரின் கடமைகளுக்கு இடையூறுகளை ஏற்படுத்தினர் என குற்றம் சாட்டி பொலிஸார் விசாரணை களை முன்னெடுத்து வந்தனர்.

இந் நிலையில் நேற்றுமுன்தின கிழமை யாழ்ப்பாண பொலிஸாரினால் தவத்திரு. வேலன் சுவாமிகள் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத் தப்பட்டார்.

இந்நிலையில் தவத்திரு.வேலன் சுவாமிகள் பிணையில் விடுவிக்கப் பட்டார். வேலன் சுவாமிகள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந் திரன் மற்றும் விஸ்வலிங்கம் மணிவண் ணன், சட்டத்தரணி சுகாஷ் ஆகியோர் ஆஜராகியிருந்தனர். (ம-7,33,104)

## ஜெய்சங்கர்...

இதன்போது இவர் பல்வேறு தரப் பினரைச் சந்தித்து கலந்துரையாட வுள்ளார்.

இந்திய வெளியுறவுத்துறை அமைச் சர் எஸ்.ஜெய்சங்கர் மாலைதீவு மற்றும் இலங்கைக்கான மூன்று நாள் உத்தி யோகபூர்வ விஜயத்தை நேற்று ஆரம் பித்தார்.

இந்தியாவின் இரண்டு முக்கிய கடல்சார் அண்டை நாடுகளுடனான இருதரப்பு ஈடுபாட்டை மேலும் விரிவு படுத்துவதற்காக இந்த விஜயம் அமைய வுள்ளதென இந்திய வெளியுறவுத் துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

ஜெய்சங்கர் நேற்று மாலைதீவுக்கு விஜயம் மேற்கொண்டார். இதனை யடுத்து, இன்று இலங்கைக்கு பயணிக் கும் ஜெய்சங்கர், இலங்கையின் கடன் மறுசீரமைப்பு விட யம் தொடர்பில் இந் தியாவின் ஆதரவை வெளிப் படுத்துவார் என வும், இரண்டு முக் கிய இருதரப்பு உடன்படிக்கை களிலும் அவர் கைச்சாத்திடு வார் என்றும் தெரி விக்கப்படுகிறது. (ம-7)

## உள்ளூ...

கள் ஆணைக் குழு சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட் டத்தரணி சாலிய பீரிஸ் இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார்.

உள்ளூராட்சி மன்ற தேர்தலுக் கான வேட்புமனு கோரப்பட்டுள்ள தாகவும் அந்த வேட்புமனு ஏற் றுக் கொள்ளல் எதிர்வரும் 21 ஆம் திகதி நண் பகல் 12 மணியு டன் நிறைவடை யவுள்ளதாகவும் அவர் நீதிமன்றத் திற்கு அறியப் படுத்தியுள்ளார். (ம-7)

## பேரா...

மாறு கோரி பேரா தனை பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் இந்த எதிர்ப்பு பேர ணியை ஆரம்பித் தது. (ம-7)

## அதிகாரத்தை...

வைப்புவேளை விவாதத்தின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

வடக்குக் கிழக்கை பிரதிநிதித் துவப்படுத்தும் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள், நாடு இன்று இருக்கும் நிலைமையில் இவ்வாறான கோரிக் கைகளை விடுத்து பாவத்தை தேடிக் கொள்ள வேண்டாம் என நாம் கேட்டுக் கொள்கிறோம்.

13ஐ முழுமையாக கொடுப்பதா யின், அதிகாரத்தை பரவலாக்கல் செய்வதாயின், முதலில் இந்த நாடு அபிவிருத்தி அடைந்த நாடாக மாற்ற மடைய வேண்டும்.

இனவாதம் இந்நாட்டில் இருக்கும் போது, அதிகாரத்தை பரவலாக்கி னால் மீண்டும் நாட்டில் பயங்கரவாதம் தலைதூக்கும். இரத்த ஆறு ஓடும்.

தெற்கு மக்கள் வடக்கு மக்களை குரோதத்துடன் பார்ப்பார்கள். தெற்கி லும் வடக்கிலும் மீண்டும் பிரச்சினைகள் ஏற்படும் எனவே, இவ்வாறான செயற் பாடுகளுக்கு ஜனாதிபதி இடமளிக் கக்கூடாது என்று நான் ஜனாதிபதி யிடம் கேட்டுக் கொள்கிறேன்' எனத் தெரிவித்துள்ளார். (ம-7)


SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1979 நிறம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2023.01.18 தினம் புதன்கிழமை
N 16 36 51 60
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,765,100/-
DLB

சனிதா
புதன்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.01.18
சீட்டிழுப்பு இல : 4140
வர்ணம் : ஊதா
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,910,040/-
வெற்றி இலக்கங்கள்
14 25 40 49 N
DLB

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 4,822,128/-
திகதி 2023-01-18
வெற்றி வாரம் 3691
வர்ணம் பச்சை
வெற்றி இலக்கங்கள் 03 04 14 20
7098
349
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 10,152,320/-
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
O 27 02 26 65 66
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 1155
வர்ணம் பச்சை
திகதி 2023.01.18 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 298,770,026.20
DLB தொலைபேசி : 011-2 333 546-47 Web : www.dlb.lk

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1889
சீட்டிழுப்பு திகதி 2023-01-18
வெற்றி இலக்கங்கள்
15 28 45 56 Y
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 39,070,905.20
DLB தொ. பே. : 0112 333 546/47 Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
புதன்கிழமை
சீட்டிழுப்பு இல : 1805
சீட்டிழுப்பு திகதி : 2023.01.18
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 4,540,780/-
வெற்றி இலக்கங்கள்
14 30 32 56 T
DLB


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உண்டியல் குலுக்குபவரை ஜனாதிபதியாக்கியது தவறு

## சரத் பொன்சேகா – மைத்திரி பாராளுமன்றில் கடும் மோதல்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கும் இடையில் நேற்று பாராளுமன்றத்தில் கடும் கருத்து மோதல் ஏற்பட்டது.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதிக்கு 100 மில்லியன் ரூபாய் இழப்பீட்டை செலுத்த வேண்டியேற்பட்டுள்ளதாகவும் இழப்பீட்டை செலுத்த புறக்கோட்டையில் உண்டியலை குலுக்கிக்கொண்டு இருக்க போவதாக முன்னாள் ஜனாதிபதி கூறியுள்ளதாகவும் சரத் பொன்சேகா கூறினார்.

உண்டியலை குலுக்கிக்கொண்டு புறக்கோட்டையில் இருக்க வேண்டிய நபர்களை ஜனாதிபதி பதவிக்கு கொண்டு வந்தால், இப்படியான பிரச்சினைகளை எதிர்நோக்க நேரிடும் எனவும் பொன்சேகா தெரிவித்தார்.

இதற்கு பதிலளித்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, என்னிடம் பணம் இல்லை என்பதால், புறக்கோட்டையில் பணம் கொடுத்தாலும் நான் பெற்றுக்கொள்வேன்.

கடந்த சில தினங்களாக என்னை சிறையில் அடைக்க வேண்டும் என்று பொன்சேகா கூறி வருகிறார். தயவுசெய்து, உயர் நீதிமன்றத்தின் வழக்கு தீர்ப்பை வாசியுங்கள். தாக்குதல் தொடர்பான தகவல் கிடைத்தும் ஜனாதிபதிக்கு தெரியப்படுத்தவில்லை என்றே தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

சிறையில் இருந்த உங்களை நானே குற்றச்சாட்டில் இருந்து முற்றாக விடுதலை செய்தேன். பீல்ட் மார்ஷல் பதவி வழங்கினேன். என்னை இப்படி பேசுவது அநீதியானது.

என்னை இலக்கு வைத்து பாதுகாப்பு பற்றி உங்களால் பேச முடியாது. நீங்கள் இராணுவ தலைமையகத்தில் இருந்த போதே உங்களை இலக்கு வைத்து குண்டு தாக்குதல் நடத்தப்பட்டது. தான் இருக்கும் இடத்தின் பாதுகாப்பை கூட பலப்படுத்த தெரியாதவர் என்னை பற்றி பேசுகிறார். என தெரிவித்தார். (ம-7)


கனடாவில் வேலைவாய்ப்பு, கல்வி-கருத்தரங்கு

Hotel Managment / Health care போன்ற துறைகளில் Work Permit எடுப்பதற்கான வழிகாட்டல்கள் மற்றும் Student Visa விற்கான ஆலோசனைகளும் அனுமதிகளும் கனடாவிலிருந்து வருகைதந்திருக்கும் அங்கீகரிக்கப்பட்ட கனடிய குடிவரவு ஆலோசகரால் நேரடியாக வழங்கப்படும்

CANADA MIGRATION PILOT

திகதி- 21.01.2023 (சனிக்கிழமை) நேரம்- 12 மணி

கட்டணம் :- 2000/= (மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள்)

CIMS COLLEGE 0777-068-777

49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம் (C-5813)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (14281)

076 825 7716 (ஆகாஸ்)

வேலைவாய்ப்பு

வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள Villoge Hotel & Indian Restaant ற்கு அனுபவமுள்ள Housce Keeper & Waiter தேவை.

தொடர்புகளுக்கு : 076 830 3931 (14290)


## காணவில்லை

பருத்தித்துறையில் இருந்து நீதிமன்ற வீதியூடாக தம்பசிட்டி செல்லும் வழியில் பெறுமதி மிக்க தங்க ஆபரணம் பணம் (CHF) மற்றும் விலையுயர்ந்த கைக்கடிகாரம் என்பவை அடங்கிய கறுப்புநிற கைபை ஒன்று 15.01.2023 தைப்பொங்கலன்று தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் உடனடியாக தொடர்புகொள்ளவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு : 076 005 6998 (C-5811)


வேலைவாய்ப்பு

இலங்கையின் முன்னணி The Inner Circle நிறுவனத்தின் புதிய கிளைக்கான பதவி வெற்றிடங்கள் கோரப்படுகின்றன.

பதவி வெற்றிடங்கள்
- சந்தைப்படுத்தல் பிரதிநிதிகள்
- மேற்பார்வையாளர்
- Bike Rider
- Tele Caller

O/L & A/L வயது:18–28

பெற்றுக்கொள்ளும் சலுகைகள்
- E.P.F. & E.T.F
- அடிப்படைச் சம்பளத்துடன் 40,000/= இற்கும் அதிக வருமானம்
- தெற்காசியாவின் உயர்மட்ட தொலைத்தொடர்பு பிரதிநிதியாக செயற்படும் வாய்ப்பு



076 770 7759 (14319)

பணிப்பெண் தேவை

யாழ்ப்பாணத்தில் வீட்டில் தங்கியிருந்து வேலை செய்ய பணிப்பெண் தேவை.

077 815 3300 (14289)


## கண்ணீர் அஞ்சலி



மண்ணில் 05 • 08 • 1953

விண்ணில் 18 • 01 • 2023

யாழ் வணிகர் கழக முன்னாள் தலைவர், இப்போதைய உப தலைவர்
இ.ஜெனக்குமார் அவர்களின் மைத்துனர்


**அமரர் பொன்னுத்துரை சடாச்சரசோதி**

அவர்கள் (18.01.2023) அன்று காலமானார். அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(14317) யாழ்.வர்த்தக நண்பர்கள்

## மரண அறிவித்தல்

### தர்மலிங்கம் சிவகுமாரன்
(இராசு வாத்தியார்-இளைப்பாறிய ஆசிரியர்)



செட்டிவளவு, இணுவில் மேற்கு இணுவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் சிவகுமாரன் (இராசு வாத்தியார்) அவர்கள் கடந்த 18.01.2023 அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"குமரஸ்தான்"
செட்டிவளவு, இணுவில் மேற்கு, இணுவில். – குடும்பத்தினர். (C-5812)


காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கோயிலாக்கண்டி பகுதியில் 24 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

நிலப்பரப்பு
- A32 பிரதான வீதியில் இருந்து 600m தூரம்.
- 18 அடிப் பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- A32 பிரதான வீதியில் இருந்து இரு வழிப் பாதைகள் உள்ளன.
- நெய்தல் பீச்சுக்கு (Beach) அருகாமையில் உள்ளது.
- கோயிலாக்கண்டியில் இருந்து யாழ். நகரத்திற்கும் சாவகச்சேரி நகரத்திற்கும் அரச தனியார் பஸ் போக்குவரத்துச் சேவை உள்ளது.
- இக் காணியின் தெற்கு எல்லை கடற்கரை (பீச்)
- நல்ல தண்ணீர் ஊற்றுச்சூழல் (கட்டுக் கிணறும் உள்ளது)

ஒரு பரப்பின் விலை 675,000 ரூபாய் மட்டும்

பார்வையிடும் நேரம்
காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

தொடர்பு - ஜெயம் (14316)

077 814 7389, 077 986 5457


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.01.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org